

# விவேகானந்தரின் வியப்புக்குரிய செயல்கள்

படைப்புச்செம்மல்
பாபநாசம் குறள்பித்தன்

# விவேகானந்தரின் வியப்புக்குரிய செயல்கள்

வீரத்துறவி விவேகானந்தரின்
150-வது பிறந்த நாள்
நல்வாழ்த்துக்கள்
12-01-2013.

படைப்புச் செம்மல்

**பாபநாசம் குறள்பித்தன்**

வெளியீடு:

**விவேகானந்தா சமூகத் தொண்டு நிறுவனம்,**

வட்டாட்சியர் அலுவலகச் சாலை,
பாபநாசம் - 614 205,
தஞ்சை மாவட்டம்.
போன்: 04374 - 222985
94437 88766

## நூல் விபரம்

| | | |
|---|---|---|
| நூலின் தலைப்பு | : | **விவேகானந்தரின் வியப்புக்குரிய செய்திகள்** |
| நூலாசிரியர் | : | படைப்புச்செம்மல் பாபநாசம் குறள்பித்தன் |
| நூலுரிமை | : | ஆசிரியருக்கே |
| முதல் பதிப்பு | : | ஜனவரி 2009 (12.01.2009-விவேகானந்தரின் பிறந்தநாளன்று வெளியிடப்பட்டது) |
| **விலை** | : | **ரூ.30.00** |
| நூல் அளவு | : | 1 x 8 கிரவுன் |
| பக்கங்கள் | : | 80 பக்கங்கள் |
| எழுத்து | : | 12 புள்ளிகள் |
| ஒளி அச்சு | : | குகன் கம்ப்யூட்டர்ஸ், சென்னை-8 (94442 92899) |
| அச்சிட்டோர் | : | அம்சா ஆப்செட், சென்னை. |
| வெளியீடு | : | **விவேகானந்தா சமூகத் தொண்டு நிறுவனம்,** வட்டாட்சியர் அலுவலகச் சாலை, பாபநாசம் - 614 205, தஞ்சை மாவட்டம். |



கவிமுகில்

திரைப்படப் பாடலாசிரியர்.

## அறிவுக்கண் திறக்கும் அற்புத சாவி...


தத்தர் குடும்பத்தில் பிறந்த சித்தர்
தத்தி தாவும் பருவத்திலும் இவர் புத்தர்
ஆமாம்! வீரத்துறவி விவேகானந்தர்
பக்தி மார்க்கத்தை பணமார்க்கமாக்கும்
சில பண்டாரங்களுக்கு மத்தியில்
புத்திக்கு சூட்டப்படும் ஆடைதான் பக்தி என்று
புதிய கீதம் பாடிய புரட்சி புரோகிதர் இவர்.
ஆங்கிலத்திடம் தாய்மொழியை
அடகு வைத்தவர்களுக்கு மத்தியில்
தாய்மொழி கல்வியே சிறந்ததென தலைநிமிர்ந்தவர்
தரணியே மெச்சத் தலைசிறந்தவர்
இவர் இந்திய இளைஞர்களின் தூண்டுகோல்
இறையாண்மையை புணரமைத்த துலாக்கோல்
அகண்ட அறிவை ஆழமாக்க ஆறாம் அறிவை கூர் தீட்டியவர்

அகண்ட வெளியில் உண்மை விளைய
ஏழாம் அறிவுக்கு ஏர் பூட்டியவர்
இப்படி எண்ணத்தால் உயர்ந்தவரை
தன் எழுத்தால் உயர்த்திப் பிடித்திருக்கும்
ஐயா கவிஞர் பாபநாசம் குறள்பித்தன்
எளிய நடையில், அறிய தகவல்களை
பாமரனும் அறியும் வண்ணம் படைத்தளித்தார்
படித்து பயன்பெறுக, தன் எழுதுகோல்
கலப்பையால், இடையறாது தமிழன் மனதை
உழுதுகொண்டேயிருக்கும் ஐயா அவர்கள்
அறிவு விதையை பதியம் போட்டு
அறிய வகையில் பயிர் செய்து
ஆறாம் அறிவை விசாலப்படுத்தும்
அரிமா, இந்த கவிஞர் குறள்பித்தனின்
இந்நூல் நமது அறிவுக் கண்களைத்
திறக்கும் அற்புத சாவி!

கவிமுகில்

***136, மேடவாக்கம் மெயின்ரோடு,***
***ஆதம்பாக்கம், சென்னை-88.***
**செல்:** 94444 45555

# காணிக்கை



பிறப்பு நடந்து;
வளர்ப்பும் நடந்து;
விபரீதமாய்
விபத்தும் நிகழ்ந்து;
உயிரும் துடித்தது...
இருந்தும் இங்கே
பிரிந்த உயிர்
உயிரோடு மீண்டும்...
வாழ்கிறது...!
ஹிதேந்திரன் உருவில்...!
வாழும் அந்த 'உயிர் தீபத்தின்'
நினைவில் வாழும்
பெற்றோர்களுக்கு...



# என்னுரையாக...

## o வீரத்துறவி...



பாபநாசம் குறள்பித்தன்

இனிய வணக்கம்!

விவேகானந்தரின் வீரமும், அவரது ஆன்மிக இதயமும், இந்தியத் திருநாட்டின்மீது அவர் கொண்டிருந்த பற்றும், இந்திய மக்கள் மீது அவர் வைத்திருந்த மனித நேயமும் அளவிடற்கரியது.

தான் கற்ற கல்வியாலும், தான் பெற்ற இறையுணர்வாலும் நம் நாட்டின் புகழை உலகறியச் செய்த அறிவுக்கடல்; ஆன்மிகப் புதையல், அவர்!

அவரின் வாழ்க்கை வரலாற்றை, ஒவ்வொரு இந்தியக் குடிமகனும், தங்கள் வாழ்நாளில் ஒருமுறையேனும் படிக்க வேண்டும் என்பது என் எண்ணம்...

அந்த வகையில் விவேகானந்தரின் சமூகத் தொண்டு நிறுவனத்தின்

இயக்குநர் தோழர் தங்க.கண்ணதாசன் அவர்களால் மீண்டும் படிக்க வாய்ப்புக் கிடைத்தது. நன்றி!

விவேகானந்தர் வாழ்க்கை வரலாறு சுவையான ஒன்றாகும். அவ்வரலாற்றில் அரிய செய்திகள், நாம் அறிய வேண்டிய செய்திகள் பல உள்ளன... அவற்றில் சிலவே இந்நூலில் அடக்கம். படியுங்கள்...

இந்நூல், விவேகானந்தரின் வாழ்க்கை வரலாற்றைப் படிக்க உங்களுக்குத் தூண்டுகோலாக அமைந்தால் எமக்கு மகிழ்வே...!

இந்நூல் வெளிவர காரணமாக இருந்த விவேகானந்தர் சமூகத் தொண்டு நிறுவனத்தின் இயக்குநர் தோழர் தங்க.கண்ணதாசன் அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியும், பாராட்டுதலும் என்றும் உரியது.

எப்போதும்போல் என் எழுத்திற்கும் இதயத்திற்கும் துணை நிற்கின்ற உயிர்த்துணைவியார் நீலா கண்ணன் அவர்களுக்கு என் வணக்கமும் பாராட்டுதலும்...

13/1, இரண்டாவது குறுக்குச் சந்து,
வெள்ளாளர் தெரு,
கோடம்பாக்கம்,
சென்னை-24.
அலைபேசி: 94444 54335

## நுழைவாயில்...

உலகெங்கிலும் அவ்வப்போது மகான்கள்; தத்துவஞானிகள் தோன்றுவார்கள்.

அப்படித்தான், நம் நாட்டிலும் ஆதிசங்கரர், இராமானுஜர், சித்தர், மத்துவர், புத்தர், ஏசு, நபிகள், கபீர், இராமகிருஷ்ணர் என்று பலர் தோன்றினர்.

அந்த வரிசையில்தான் அறிவின் ஒளியாய், ஆன்மிகப் பிழிவாய் ஒருவர் தோன்றினார்.

இந்து மதம் இருட்குகையில் அடைபட்டுக் கிடந்தபோது, அதை உலக நாடுகளில் எல்லாம் கலங்கரை விளக்கமாய் ஏற்றி வைத்தவர்...

ஆன்மிகப் பயிர் அகிலம் முழுவதும் வளர, தன் அறிவு நீரை ஊற்றிக் காத்து வளர்த்தவர்...

தன் ஏற்றமிகு ஆற்றலால் உலகம் முழுதும் சென்று நமது பண்பாட்டையும், கலாச்சாரத்தையும் பரப்பி நின்றவர்...

அவர் ஞானி; வீரத்துறவி; அவர்தான் விவேகானந்தர்!

## அறிவொளி பிறந்தது...!

**கொ**ல்கத்தாவின் வடபகுதியில் 'தத்தர்' என்ற குடும்பத்தினர் சிறப்போடு வாழ்ந்து வந்தனர்.

இச்சிறப்பு மிக்க குடும்பத்தில்தான் விசுவநாதர் என்பவர் பிறந்தார்.

இவர் கல்விமான்; பாடுவதிலும், நீதிக்காக வாதாடுவதிலும் வல்லவர்.

இவர், புவனேசுவரி என்ற பெண்மணியை தனது இல்லத்தரசியாக ஏற்றுக்கொண்டார்.

அவரும் கல்வி கேள்விகளில் சிறந்தவராக இருந்து வந்தார்.

இவர்களுக்கு முதலில் இரண்டு பெண் குழந்தைகள் பிறந்தனர்.

ஆண் மகன் இல்லையே என்று ஏங்கினார்கள். அதனால், சிவனை அனுதினமும் வேண்டினார்கள்.

அவர்களின் வேண்டுதலுக்குப் பலனாக ஒரு ஆண் குழந்தை 12-01-1863 அன்று பிறந்தது.

அந்தக் குழந்தையே நரேந்திரன் என்று முதலில் பெயர் சூட்டப்பட்டு, வீட்டாரும், உறவுகளும் அன்போடு 'பிலே' என்றும் அழைத்த விவேகானந்தராவார்.

இவனே பெற்றோர்களுக்கு கடைக்குட்டி என்பதால்தானோ இளமையில் சுட்டித்தனத்தோடு இருந்தான்.

வீட்டிலும் வெளியிலும் சிறிது நேரம்கூட சும்மா இருக்கமாட்டான் அரும்பிலேயே. அப்படி ஒரு குறும்பு. குறும்புக்கு மறுபெயர் நரேந்திரன் என்று சொன்னால் அது மிகையாகாது.

தென்றல் புயலாக மாறும்; புயலே தென்றலாக மாறுமா...? மாறும்...!

நரேந்திரனின் வாழ்க்கையும் அப்படித்தான் பிற்காலத்தில் அமைந்தது.

தக்க வயதில் நரேந்திரன் பள்ளியில் சேர்க்கப் பட்டான். அவனுக்கு வியப்பூட்டும் அளவிலே நினைவாற்றல் கொண்டவனாக இருந்தான்.

செல்வக் குடும்பத்தில் பிறந்த நரேந்திரன், கல்விச் செல்வத்தைத் தேடுவதிலும் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தான்.

வகுப்பறையோடு பாடப் புத்தகங்களை மறந்துவிடும் குணம் பெற்றவனாக இருந்தான்.

வீட்டிற்குச் சென்றால் விளையாட்டுதான். பாடநூலைத் தொடமாட்டான், நரேந்திரன்.

தேர்வு காலத்தில்கூட, அவன் பாட நூல்களைத் தொடுவதில்லை. பள்ளியில் படிப்பதோடு சரி... அப்படி ஒரு நினைவாற்றல்.

ஆனால், தேர்வில் முதல் மதிப்பெண்ணில் நிற்பான்.

அந்நியர் ஆண்ட அக்காலத்தில், ஆங்கிலம் கற்பதையே பெருமை என்று எல்லோரும் எண்ணினர்.

ஆனால், நரேந்திரன் அம்மொழியைக் கற்க விரும்பவில்லை. தாய்மொழியையே கற்க விரும்பினான்.

ஆங்கில மொழியின் அவசியத்தை அவன் தந்தையும், ஆசிரியர் பெருமக்களும் தொடர்ந்து - தொல்லைப்படுத்தி - சொல்லிவந்த காரணத்தால், அம்மொழியைக் கற்கத் தொடங்கினான்.

அன்று தந்தை சொல்லை மட்டும் நரேந்திரன் கேட்காமல் இருந்திருந்தால், நம் இந்து மதத் தத்துவத்தை உலகறியச் செய்திருக்க இயலுமா என்பது ஐயம்தான்!

நரேந்திரனுக்குப் பதினேழு வயதாயிற்று. வயது ஏற ஏற சுருண்டு போயின அவனுடைய குறும்புகளும்.

பள்ளிப்படிப்பு முடிந்தது. அடுத்து அவனது படிப்பு 'ஜெனரல் அசம்பளி' என்ற கல்லூரியில் தொடர்ந்தது. சட்டம் படித்தான்.

கல்லூரிப் பாடங்களோடு, வங்காளி, வடமொழி, ஆங்கிலம் ஆகியவற்றில் உள்ள சிறந்த நூல்களைத் தேர்வு செய்து படிக்கத் தொடங்கினான்.

இந்த வேளையில் மற்றவர்களோடு பேசிப்பழகுவது இல்லை. விவாதம் செய்வதையே விரும்பினான். கல்வி சிந்தனையோடு, கடவுள் சிந்தனையும் வளர்ந்தது, அவனுக்கு.

கடவுளை யாரும் பார்க்கலாம்தானே...? அவர் பார்க்க முடியாதவர் என்றால், ஏன் அவரைப்பற்றி வீணில் பேச வேண்டும்? விரதம் இருக்க வேண்டும்? பாலும் பழமும் படைக்க வேண்டும்?

இப்படி சிந்தனை அலை அலையாய் அவனுள் எழுந்தன.

அதனால், பெரியோர் யாரைக் கண்டாலும், ''கடவுளை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா...?'' என்று கேட்கத் தொடங்கினான்.

அவன் கேட்ட ஒரே கேள்விக்கு அவர்கள் வியப்பாகி நின்றார்களே தவிர, ஒரு சிலர் கடவுளைப் பற்றிச் சொன்னார்களே தவிர, கடவுளைக் காணும் வழியை ஒருவரும் சொல்லவில்லை.

இவனின் இந்தத் தேடலின் முடிவில்தான் அவனுக்கு ஸ்ரீஇராமகிருஷ்ணரைக் கண்டடைய வாய்ப்பாயிற்று.

அவர்தான் இவனுக்கு கடவுளைப்பற்றி சொன்ன தோடு, கடவுளையும் காண்பித்தார்...

அதனால், அவரையே ஆன்மிகக் குருவாக ஏற்றுக் கொண்டான். அவரிடமே சந்நியாசமும் பெற்றுக் கொண்டான்.

துறவி ஆகிறபோதே ஒவ்வொருவனும் வேறு பிறவி எடுத்துவிடுகிறான்.

எனவே, அவர்கள் எல்லோருமே துறவறத்தை ஏற்றதற்கு அடையாளமாக தம் பெயர்களை மாற்றி வைத்துக் கொண்டனர்.

எனவே, நரேந்திரன் என்ற தன் பெயரை இங்கேதான் விவேகானந்தர் என்று சூட்டிக்கொண்டார்.

தேசபக்தியோடு, தெய்வ பக்தியும் இரு கண் களாயின.

'உலகில் பல மதங்கள் உள்ளன. அந்த மதங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வழியில் உண்மையை உரைக்கின்றன. அந்த மதங்கள் காட்டுகின்ற வழிகளை எல்லாம் ஒன்றிணைக்க வேண்டும்' என்று அமெரிக்க நாட்டு அறிஞர்கள் நினைத்தார்கள்.

அதற்காக உலகிலுள்ள பல்வேறு மதங்களின் பிரதிநிதிகளை அழைத்து மாநாடு ஒன்று நடத்துவது என்று அவர்கள் முடிவு செய்ததோடு, அந்த சர்வசமய மாநாட்டை சிகாகோ நகரில் நடத்துவது என்றும் முடிவெடுத்தனர்.

அதன்படியே இந்தியாவிலிருந்து விவேகானந்தர் அமெரிக்காவிற்கு அனுப்பப்பட்டார்.

அவரும் சிகாகோவில் நடந்த சர்வசமய மாநாட்டில் கலந்துகொண்டார்.

அந்த விழாவில் பேசிய அனைவரும் 'சீமான்களே... சீமாட்டிகளே...! என்று கூறி பேச்சைத் தொடங்கி னார்கள்.

ஆனால், நம் விவேகானந்தரோ, 'சகோதரிகளே! சகோதரர்களே...!' என்று ஆங்கிலத்தில் தொடங்கியதுமே, கூட்டத்திலிருந்துஎழுந்த கரவொலி அடங்கவே சில நிமிடங்கள் ஆயின.

பொழிவா அது? இந்து மதத்தின் பழச்சாறு! நம் கலாச்சாரத்தின் கற்கண்டு நீறு! நம் பண்பாட்டின் தேன் தூறல்!


இப்படி அவர் பேச்சு பழச்சாறாய்; கற்கண்டு நீராய், தேன் தூறலாய்... சர்வசமய மாநாட்டில் அச்சொற் பொழிவு இருந்தது.

இந்தியாவில் பிறந்து, இந்தியர்கள் மட்டுமே அறிந்திருந்த விடிவெள்ளியை, அறிவு விளைச்சலை... அன்றுமுதல்... உலக மக்கள் உள்ளத்தில் எல்லாம்; சிந்தனையில் எல்லாம் நீக்கமற நிறைந்தார்; நிறைவாக உயர்ந்தார்; விவேகானந்தர்.

இத்தகைய அறிவிற்கும், ஆற்றலுக்கும் உரியவரான விவேகானந்தரின் வாழ்க்கை வரலாற்றில், வியப்புக்குரிய செயல்கள் - நிகழ்வுகள் ஏராளம் உண்டு.

அவற்றிலே ஒரு சில மட்டும் இங்கே...

**தொடரலாம் இனி...**



# 1. அனுமனைத் தேடி...

நரேந்திரன் விளையாட்டுப் பிரியன். அதே போல், புராணக் கதைகளைக் கேட்பதிலும் ஆர்வம் கொண்டிருந்தான்.

அதனால், கதாகாலட்சேபம் எங்கு நடந்தாலும் அங்கு சென்றுவிடுவான்.

ஒருநாள் இராமர் கதை கதாகாலட்சேபம் நடந்து கொண்டிருந்தது. அப்போது அனுமன் ஒரு சிரஞ்சிவி என்று சொல்லப்பட்டது.

அதைக் கேட்டதும் அவன் மனம் சிந்திக்கத் தொடங்கியது.

அப்போதே அனுமனைக் காணத் துடித்தான். அதனால், அன்று கதை சொல்லி முடித்ததும், கதை சொன்னவரிடம், "ஐயா! அனுமன் இப்போது எங்கே இருப்பார்? எங்கு சென்றால் அவரைத் தரிசிக்கலாம்?" என்று இதுவரை எவரும் அவரிடம் கேட்காத கேள்வியைக் கேட்டான்.

அவன் கேட்டதற்கு விடையாக கதை சொன்னவர், "அனுமன் எங்கு தங்குவார்? வாழைத் தோட்டத்தில்தான்" என்றார்.

அதைக்கேட்ட நரேந்திரன் உடனே அனுமனைக் காணப் புறப்பட்டுவிட்டான்.

அப்போது இரவு தொடங்கிய நேரம். எங்கே போனான்? வாழைத் தோட்டத்தை நோக்கித்தான்...

இரவு வெகு நேரமாகியும் நரேந்திரன் வீட்டுக்கு வராததால், பெற்றோர்கள் கலங்கத் தொடங்கினார்கள்.

மகனைக் காணாத தாய், அழுது புலம்பியபடியே விளக்கைக் கையில் ஏந்தி, வேலைக்காரர்களை துணைக்கு அழைத்துக்கொண்டு, வெளியில் சென்று தேடத் தொடங்கினார்.

நரேந்திரனோ அனுமனைக் காண வீட்டிற்கு அருகில் இருந்த வாழைத் தோட்டத்திற்குள் இருளில் உட்கார்ந்திருந்தான்.

அவனது தாய் பல இடங்களில் தேடியலைந்து விட்டு, வாழைத் தோட்டத்தின் பக்கம் வந்தபோது அங்கே இருளில் அனுமனைக் காண அமைதியாக உட்கார்ந்திருந்த மகனைக் கண்டு பதட்டத்தோடும், மகிழ்ச்சியோடும், "மகனே! நீ இந்த இருளில் உட்கார்ந்து கொண்டு என்ன செய்கிறாய்...?" என்று தூக்கி முத்தமிட்டபடியே கேட்டாள்.

அவன் கூட்டத்தில் கேட்ட அனுமனைப் பற்றிச் சொன்னான்.

"என் கண்ணே! இப்பொழுது வீட்டிற்கு வா. அனுமன் இப்போது இராமருடைய வேலையாக எங்காவது போயிருப்பார். காலையில் வந்து பார்க்கலாம்..." என்று கூறினாள் தாய்.

நரேந்திரன் மகிழ்வோடு, "அம்மா! காலையில் இங்கு வந்தால் என் அனுமனை நான் பார்க்கலாம் அல்லவா?" என்று கேட்டான்.

"கண்டிப்பாக பார்க்கலாம். வா, மகனே...!" என்று மகனைத் தூக்கிக் கொண்டு வீட்டிற்கு வந்தாள், தாய்.

நரேந்திரன் இளமையிலேயே இராமன் மீதும், அனுமன் மீதும் அளவற்ற பக்தி கொண்டிருந்தான்.

❑

## 2. அரும்பு செய்த குறும்பு!

நரேந்திரனை தக்க வயதில் பள்ளியில் சேர்த்தனர். அந்தப் பள்ளியில் துடுக்குத்தனம் செய்ததோடு, வெளிப் பிள்ளைகளிடமிருந்தும் வேண்டாத தீயச் சொற்களை எல்லாம் கற்றுக்கொண்டு வந்து, தன் வீட்டு வேலைக்காரர்களிடம் எல்லாம் அவ்வார்த்தைகளை எல்லாம் பேசிவரத் தொடங்கினான்.

இதைக்கண்டு பெற்றோர்கள் வேதனைப் பட்டனர். மகனை எப்படித் திருத்துவது என்று சிந்தித்தார், தந்தை.

'படிக்க பள்ளிக்கு அனுப்பினால்தானே இவன் இப்படிப் பேசுகிறான்...? வீட்டிலேயே ஓர் ஆசிரியரை வைத்துப் பாடம் சொல்லிக் கொடுத்தால்...'

அதன்படியே, வீட்டிற்கே ஓர் ஆசிரியரை வரவழைத்துப் பாடம் சொல்லிக்கொடுக்க ஏற்பாடு செய்தார், தந்தை.

பக்கத்து வீடுகளில் இருந்தவர்கள் அனைவருமே விசுவநாதருக்கு வேண்டியவர்களே. அவர்களிடமும் நிலைமையைச் சொல்லி, அவர்கள் பிள்ளைகளையும் சேர்த்து நரேந்திரனுடன் படிக்க ஏற்பாடு செய்தார்.

அதன்படியே ஆசிரியர் வீட்டிற்கு வந்து பாடம் சொல்லிக்கொடுக்கத் தொடங்கினார்.

ஆசிரியர் பாடம் சொல்லிக் கொண்டிருக்கும் போது, மற்ற பிள்ளைகளெல்லாம் பயபக்தியோடு ஆசிரியர் சொல்லும் பாடங்களை கேட்டுக் கொண்டிருந்தார்கள். ஆனால், நரேந்திரன் ஏதோ சிந்தனை கொண்டவனாக எங்கோ கவனமாக இருப்பான்.

அப்படி அவன் பாடங்களைக் கவனிக்காமல் இருந்து வருவதை ஆசிரியர் பல நாள் பார்த்து வந்தார். அவனோ பெரிய இடத்துப்பிள்ளை. ஏதாவது கேட்கப் போய் விபரீதமாக முடிந்துவிடுமோ என்பதால் கேட்காமல் இருந்தார்.

'இப்படியே விட்டுவிட்டால், அவன் கல்வி என்னவாகும்? அவன் தந்தைக்குத் தெரிந்து கேட்டால் என்ன பதில் சொல்வது?'

'எல்லாம் அவன் நன்மைக்காகத்தானே கேட்கப் போகிறோம்...' என்று எண்ணிக்கொண்டு, ஒருநாள்-

"நரேந்திரா, எல்லாக் குழந்தைகளும் நான் பாடம் நடத்தும்போது என்னைப் பார்த்து பாடம் கேட்டு, அறிவு பெற்று வருகிறார்கள். நீ மட்டும் நான் பாடம் நடத்தும்போது அலட்சியமாக எங்கேயோ பார்த்துக் கொண்டிருக்கிறாயே... அப்படியிருந்தால் நான் சொல்லும் பாடங்கள் உனக்கு எப்படி படியும்...?" என்று கேட்டார்.

ஆசிரியருக்கு நரேந்திரன் அறிவற்ற முட்டாள் என்று எண்ணம்.

"ஐயா...! நான் பாடத்தைத்தானே கவனித்து வருகிறேன்..." என்று கூறினான், நரேந்திரன்.

“பொய் பேச்சிற்கு ஒன்றும் குறைச்சலில்லை...” என்று கோபமாகப் பேசினார், ஆசிரியர்.

‘பொய்’ என்று ஆசிரியர் சொல்லிய வார்த்தை வெடி மருந்தாய் அவனுள் இறங்கியது; வெடிக்கத் தொடங்கினான்.

“மற்றவர்கள் பாடத்தைக் கவனித்ததாகச் சொல்கிறீர்களே... இன்று நீங்கள் சொல்லிக் கொடுத்த பாடங்களை அவர்களைச் சொல்லச் சொல்லுங்கள், பார்க்கலாம்...” என்று கோபத்தோடு கூறினான்.

ஆசிரியர் கோபத்தோடு, ‘என்னிடமே சவால் விடுகிறாயா? உன் மூக்கை அறுக்க வேண்டும்...’ என்று நினைத்தபடியே, ஒழுங்காகப் பாடங்களைக் கேட்டு வரும் மாணவர்களைப் பார்த்து, “இன்று நடத்திய பாடம் ஒன்றினைக் கூறுங்கள்...” என்று சொன்னார்.

அவர்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்களே தவிர, யாரும் வாய் திறக்கவில்லை.

ஆசிரியர் அக்கம் பக்கம் பார்த்தால் திட்டுவாரே, அடிப்பாரே என்பதால், அவரையே பயத்தோடு பார்த்துக்கொண்டு இருந்த அவர்களிடம் போய், ‘இன்று நடந்த பாடங்களைச் சொல்’ என்றால் எப்படிச் சொல்வார்கள் அவர்கள்?

மீண்டும் மிரட்டலோடு சொன்னார். “ஏன் வாய் மூடியிருக்கிறீர்கள்? ஒருவருக்குக் கூடவா தெரியாது?” என்று கேட்டார்.

மீண்டும் அங்கே மௌனமே அரங்கேறியது.

ஆசிரியருக்கு என்னவோ போலாகிவிட்டது... இருந்தாலும் விட்டுக் கொடுக்காமல்...

“நீ பாடத்தை கவனித்ததாகச் சொன்னியே... உன்னால் சொல்ல முடியுமா இப்போது...?” என்று கேட்டார், ஆசிரியர்.

“ஏன் முடியாது...?” என்று கேட்டுவிட்டு அன்று நடந்த பாடங்களை கடகடவென்று சொல்லி முடித்தான், நரேந்திரன்.

ஆசிரியருக்கு வியப்பால் விழிகள் விரிந்தன.

நரேந்திரனை அருகில் அழைத்து அணைத்துக் கொண்டு மகிழ்ச்சியோடு, “நரேன்! நீ மிகவும் புத்திசாலி. நீ இறையருள் பெற்றவன்...

“உன்னை நான் சரியாக அறிந்துகொள்ளவில்லை. அந்த வாய்ப்பு இன்றுதான் எனக்குக் கிடைத் திருக்கிறது...” என்று கூறி, மீண்டும் அவனை அணைத்துக் கொண்டார், ஆசிரியர்.

❑



## 3. மனித நேயம்

வழக்கம் போல் தோழர்களுடன் விளையாடச் சென்றான், நரேந்திரன்.

விளையாட்டுக்கான உடற்பயிற்சி கருவிகளை இரும்புக் கம்பங்களை அவர்களால் தூக்கி நிறுத்த முடியவில்லை.

அதனால், யாராவது பெரியவர்கள் வருகிறார்களா...? என்று எதிர்பார்த்துக் காத்திருந்தனர்.

அதே வேளையில், அந்த வழியாக வந்த மாலுமி ஒருவர் உதவிக்கு வந்தார்.

உதவிக்கு வந்தவருக்கு உபத்திரவம் வந்து சேர்ந்தது.

ஆமாம்...! உதவிக்கு வந்தவர்க்கே உதவ வேண்டிய சூழ்நிலை அமைந்துவிட்டது.

கவனக் குறைவாக கம்பத்தைத் தூக்கி நிறுத்த முயன்ற மாலுமிக்கே காயம்பட்டு இரத்தம் வழியத் தொடங்கியது.

நரேந்திரனின் தோழர்களுக்கு பயம் வந்துவிட்டது.

காயம் பட்டவர் சாதாரண ஆள் இல்லை. மாலுமி. பின்னால் வம்பு, சண்டை, வழக்கு என்று வந்தாலும்

வருமே... வெள்ளையர் ஆட்சி வேறு...! அதனால் தோழர்கள் எல்லாம் நரேந்திரனை விட்டுவிட்டு ஓடிவிட்டனர்.

நரேந்திரனுடன் இரு தோழர்கள் மட்டுமே இருந்தனர்.

தங்களுக்கு உதவி செய்ய வந்து காயம்பட்ட மாலுமிக்கு காயம் ஆறும் வரை ஒரு சில நாட்கள் உடனிருந்து உதவினான், நரேந்திரன்.

அவர் விடை பெறும்போது அவரது கைச் செலவுக்கு பணமும் கொடுத்தனுப்பினான், நரேந்திரன்.

தந்தையும், தாயும் யார் வந்தாலும் உதவும் மனம் கொண்டவர்கள் இல்லையா? மகன் மட்டும் இரக்கம் இல்லாமலா இருப்பான்?

இப்படி இளமையிலேயே மனித நேயம் கொண்டிருந்தான், நரேந்திரன்.

❑



# 4. முயற்சி

விமானத்தைப் பார்ப்பதற்கும், கப்பலைப் பார்ப்பதற்கும் பெரியவர்களே விரும்புவார்கள்.

காரணம், ஒன்று விண்ணில் பறப்பதாலும், மற்றொன்று நீரில் மிதப்பதாலும் அந்த விருப்பம் இருக்குமோ...?

அந்த விருப்பம் குழந்தைகளைப் பொருத்தவரை மிகமிக அதிகமாக இருக்கும்.

கொல்கொத்தா துறைமுகத்தில் போர்க் கப்பல் ஒன்று வந்து நின்றிருந்தது.

அந்தக் கப்பலை எப்படியாவது சுற்றிப் பார்த்து விட வேண்டும் என்ற எண்ணத்தில் தோழர்களோடு புறப்பட்டுவிட்டான், நரேந்திரன்.

கப்பலுக்குள் செல்ல அனுமதிச் சீட்டு வேண்டும்.

அனுமதிச் சீட்டு வழங்கும் அதிகாரியைக் காண்பதே அரிதாக இருந்தது. மற்ற அலுவலர்கள் மேல் அதிகாரியைப் பார்க்கவே அனுமதிக்க மறுத்துவிட்டனர்.

இவ்வளவு தூரம் வந்துவிட்டு கப்பலைச் சுற்றிப் பார்க்காமல் போவதா? எப்படியும் பார்த்துவிட்டுத்தான் போக வேண்டும் என்று தீர்மானித்தான், நரேந்திரன்.

அந்தக் கட்டடத்தில் மேல் அதிகாரி இருக்கும் இடத்திற்குச் செல்ல வழியிருந்ததைக் கண்டான், நரேந்திரன்.

விடுவிடுவென்று படிக்கட்டுக்களில் ஏறியவன், அதிகாரி இருந்த அறைக்குள் நுழைந்து, அவர் முன் நின்றான். தன் எண்ணத்தைச் சொன்னான்.

சிறிது நேரத்தில் அனுமதிச் சீட்டோடு வெளியே வந்தான்.

நண்பர்களை அழைத்துக்கொண்டு முன்பு அனுமதி மறுத்த அலுவலரிடம் அனுமதியைக் காட்டினான்.

பின் தோழர்களுடன் மகிழ்ச்சியாகக் கப்பலுக்குள் சென்று சுற்றிப் பார்த்தான்.

முயற்சி இருந்தால் எந்த ஒன்றையும் முடிக்கலாம்!

❑



## 5. குற்றம் குற்றமே...

ஈசுவர சந்திர வித்தியாசாகர் என்பவர் கல்வியைக் கண்களாய் நினைத்து ஒரு பள்ளியை நடத்தி வந்தார்.

இப்பள்ளியில் கோபக்கார ஆசிரியர் ஒருவர் இருந்தார். அவரைக் கண்டால் நன்றாய் படிக்கும் மாணவர்கள்கூட அவர் கேட்கும் கேள்விகளுக்கு அச்சத்தினால் சரியாக விடை சொல்ல முடியாது, அவரிடம் அடி வாங்கியிருக்கிறார்கள்.

ஒரு நாள் நரேந்திரன் வகுப்பிற்கு அந்த ஆசிரியர் வந்து சேர்ந்தார்.

வகுப்பில் ஒரு மாணவன் எதிர்பாராமல் தவறு செய்துவிட்டான் என்பதற்காக அவனை காலிலும், கையிலும் அடித்தார். அடியால் அவனது கை, கால்கள் வீங்க, அவன் துடித்துப்போனான்.

அந்தக் காட்சியை நரேந்திரனும் பார்த்தான். அவன் நாடி நரம்புகள் புடைத்தன. அந்த ஆசிரியரின் செயலைக் கண்டு அவனால் சும்மா இருக்க முடிய வில்லை.

என்ன செய்யலாம் என்று ஒரு நிமிடம் சிந்தித்தவன், அடுத்த நொடியே வாய்விட்டு கலகல வென்று சிரித்தான். மீண்டும் மீண்டும் ஆசிரியரின் அடாத செயலுக்காக வாய்விட்டுச் சிரித்தான்.

அவன் சிரித்தது ஆசிரியருக்குக் கோபத்தைத் தூண்டியது. அதனால் அவனை நோக்கி வந்தார். “ஏண்டா சிரித்தாய்...?” என்று கேட்டார்.

நரேந்திரன் பதில் சொல்லவில்லை. பதிலுக்கு நறநறவென்று பல்லைக் கடித்தபடியே நின்றிருந்தான்.

“ஏய்... இனி நீ சிரிக்க மாட்டேன் என்று சொல்லி என்னிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும். இல்லையென்றால், உன்னையும் தொலைத்துவிடுவேன்...” என்று அதட்டலோடு சொன்னார்.

நடுங்கவில்லை நரேந்திரன். அவனது மௌனம் ஆசிரியருக்கு மேலும் கோபத்தைக் கொடுத்தது.

“மன்னிப்புக் கேட்கப் போகிறாயா? இல்லையா?” இடிபோல் வார்த்தைகளை இறக்கினார்.

மாணவர்கள், நரேந்திரனுக்கு ஆசிரியர் என்ன தண்டனை அளிக்கப் போகிறாரோ என்று பயத்தோடு நின்றிருந்தார்கள்.

“மன்னிப்புக் கேட்கும் வரை உன்னை விட மாட்டேன்” என்று நரேந்திரனின் காதைப் பிடித்துப் பலமாகத் திருகிக் கொண்டிருந்தார்.

நரேந்திரனின் காதிலிருந்து இரத்தம் கசியத் தொடங்கியது. இருந்தும் ஆசிரியரின் கோபம் குறையாததால், திருகிக் கொண்டேயிருந்தார்.

நரேந்திரன் வலியால் துடித்தான், துவண்டான். இருந்தாலும் மன்னிப்புக் கேட்கவில்லை.

வலி தாங்க முடியாமல் ஒரு கட்டத்தில், “ஒழுங்காக காதிலிருந்து கையை எடுங்கள்... இல்லை, பாடம் சொல்லிக் கொடுக்கும் உங்களுக்கு நானே

பாடம் சொல்லிக் கொடுக்கும் நிலை வரும்...'' என்று கோபமுடன் பேசினான்.

இந்த நிலையில் பள்ளியை நடத்திக் கொண்டிருக்கும் ஈசுவர சந்திர வித்தியாசாகர் அங்கு வந்து சேர்ந்தார்.

'இங்கே நடந்த எதையும் அவரிடம் சொன்னால் கொன்று விடுவேன்' என்பது போல் விழிகளைத் தீயாக்கி எச்சரித்து நின்றார், ஆசிரியர்.

நரேந்திரனா பயப்படுவான்...? ஆசிரியர் முதலில் அடித்த மாணவனை அழைத்து ஈசுவரிடம் காட்டினான். தன் காதில் இரத்தம் கசிவதையும் காட்டினான்.

பின், ''நீங்களும் உங்கள் பள்ளியும் ஆயிற்று...'' என்று சொல்லியபடியே புத்தகப் பையைத் தூக்கிக் கொண்டு வெளியேறினான்.

ஈசுவரர் அவனைத் தடுத்து தன் அறைக்கு அழைத்துச் சென்றார்.

''விரோதமாக நடந்து வந்த ஆசிரியரைப் பற்றி, உன்னால் இன்று நான் அறிந்து கொண்டேன். ஓர் ஆசிரியர் தவறு செய்தார் என்பதற்காக கோபித்துக் கொண்டு பள்ளியை விட்டு நீ போகலாமா...? நீ பெரிய மேதையின் பிள்ளை. நீயும் பெரிய மேதையாக வர வேண்டாமா...?'' என்று ஈசுவரர், நரேந்திரனைச் சமாதானப்படுத்தி வகுப்பிற்கு அனுப்பி வைத்தார்.

நரேந்திரன் இளமையிலேயே அநீதிகளுக்கு குரல் கொடுக்கவும், துணிவோடு செயல்படுகின்ற திறனும் கொண்டிருந்தான்.

❑

## 6. ஆற்றலின் வெளிப்பாடு...!

ரெய்ப்பூரில் பணியிலிருந்த விசுவநாதருக்கு கொல்கத்தாவிற்கு மாற்றலாகியது.

நரேந்திரனுக்கு அப்போது வயது பதினாறு. கொல்கொத்தாவிற்கு குடும்பம் வந்ததும், நரேந்திரனைப் பள்ளியில் சேர்க்க தந்தை விரும்பினார்.

எளிதில் பள்ளியில் சேர்க்க முடியவில்லை. காரணம், இடையில் இரண்டாண்டுகள் அவன் படிப்பு தடைபட்டிருந்ததால், உரிய வகுப்பில் அவனைச் சேர்த்துக்கொள்ள பள்ளி நிர்வாகம் மறுத்தது.

“மூன்று ஆண்டுகள் படிக்க வேண்டிய பாடங் களை எப்படி இந்தப் பையன் ஓர் ஆண்டில் படிப்பான்...? அது எப்படி அவனால் முடியும்...?” என்று நிர்வாகம் கேட்டது.

“நிச்சயமாக பையன் தேர்ச்சி பெற்று விடுவான்...” என்று உறுதி கூறினார், தந்தை.

அரை மனதோடு பிறகு நிர்வாகம் ஒப்புக் கொண்டு நரேந்திரனை பள்ளியில் சேர்த்துக் கொண்டது.

‘பள்ளியில் எப்படியோ மகனைச் சேர்த்து விட்டுவிட்டோம். அவன் மூன்று ஆண்டுகள் படிப்பைப் படித்து தேர்ச்சி பெற வேண்டுமே...’ என்ற கவலை பிறந்தது, தந்தைக்கு. ஆசிரியர்களும் கவலை கொண்டனர்.

இவர்கள் எண்ணங்களை நன்குணர்ந்து இருந்தான், நரேந்திரன்.

முயன்றால் முடியாதது உண்டோ...? பொறுப்போடு படித்தான்; சிறப்பாகத் தேர்வும் எழுதினான்.

ஆசிரியர்களும் அவனது தந்தையும் பதட்டத்தோடு தேர்வு முடிவினை எதிர்பார்த்துக்கொண்டு இருந்தார்கள்.

தேர்வு முடிவும் வந்தது...!

நரேந்திரனால் படிக்க முடியுமா...? தேர்வில் வெற்றி பெறுவானா...? விளக்கம் பெறுவானா...?

இப்படி கேள்விகளை இதயத்தில் ஓராண்டுகளாக மாட்டிக் கொண்டிருந்தவர்களுக்கெல்லாம் விடையாக - வியப்புக் குறியாக தேர்வு முடிவு இருந்தது.

ஆமாம். யாருமே எதிர்பார்க்காத வகையில் அப்பள்ளியின் முதல் மாணவனாகத் தேர்வு பெற்றிருந்தான்.

மூன்றாண்டுக் கல்வியை ஓராண்டில் கற்றுத் தேறிய நரேந்திரனின் ஆற்றலை - அறிவுத் திறனை கண்டு புகழாதவர்களே - பாராட்டாதவர்களே இல்லை.

தந்தை மகிழ்ச்சிக் கடலில் மிதந்தார். தாயோ முத்த மழை பொழிந்து திருஷ்டி சுற்றிப் போட்டார்.

❑

## 7. தியான விளையாட்டு

**வ**ழக்கம் போல் மரத்தடியில் தோழர்களோடு நின்றிருந்தான் நரேந்திரன்.

"இன்று என்ன விளையாட்டு விளையாடலாம்?" என்று நரேந்திரனிடம் நண்பர்கள் கேட்டார்கள்.

ஒரு நிமிடம் சிந்தனையில் ஆழ்ந்த நரேந்திரன், "தியானம் செய்கிற விளையாட்டு விளையாட லாமா...?" என்று கேட்டான்.

"தியானம் செய்கிற விளையாட்டா? அது என்ன விளையாட்டு...?" ஏதும் புரியாத நிலையில் மற்ற சிறுவர்கள் கேட்டார்கள்.

"புராணக் கதைகள் சொல்கிறபோது தியானத்தைப் பற்றி என் அம்மா நிறைய சொல்லியிருக்கிறார்கள். கண்களை மூடிக் கொண்டு இறைவனையே எண்ண வேண்டும். அப்போது நமக்கு மயக்கம் வரும். நீண்ட நேரம் நம்மை மறந்து ஆனந்தமாக அப்படியே இருக்கலாம்..." என்று கூறினான், நரேந்திரன்.

"சரி... அதைத்தான் இன்று விளையாடிப் பார்ப்போமே..." என்று மற்ற சிறுவர்கள் கூறினார்கள்.

எல்லோரையும் தன்னைச் சுற்றி அமரச் சொன்னான் நரேந்திரன்.

"எல்லோரும் கண்களை மூடிக் கொள்ளுங்கள். இறைவனை நினைத்துக் கொள்ளுங்கள்..." என்று நரேந்திரன் கூறினான்.

அவ்வாறே சிறுவர்களும் செய்தனர்.

மற்ற சிறுவர்களால் ஒரு நிலையில் இருக்க முடியவில்லை. சிலர் அரைக் கண்களைத் திறந்து பார்த்தனர். சிலர் அரைக் கண்ணால் பார்த்தார்கள். பின் மூடிக் கொண்டார்கள்.

சிறிது நேரத்தில் கண்களை மெல்லத் திறந்து பார்த்தார்கள். அங்கே அவர்களை நோக்கி நாகப்பாம்பு ஒன்று படம் எடுத்தபடி சீறி வருவதைக் கண்டார்கள்.

அடுத்த நொடியே பயத்தோடு, ‘‘பாம்பு... பாம்பு...’’ என்று அலறிக்கொண்டே எழுந்து ஓடத் தொடங் கினார்கள்.

ஓடியவர்கள் ஓடிப்போய் தொலைவில் நின்று கொண்டு, ‘‘நரேந்திரா... பாம்பு... பாம்பு...’’ என்று அலறினார்கள்.

அவருக்குக் காதில் விழுந்தால்தானே...?

படம் எடுத்து விரைந்து அவரை நோக்கி வந்த நாகம், அவர் தெய்வ ஒளி பொருந்திய முகத்தைக் கண்டு வணங்குவதுபோல், தன் படத்தைக் கீழே தரையில் வைத்து, பின் அங்கிருந்து பின்னோக்கி விரைந்து எங்கோ போனது.

அதைக் கண்டு வியப்போடு சிறுவர்கள் நின்றிருந்தனர்.

நெடுநேரம் கழித்து கண் திறந்த நரேந்திரன், தன் நிலை அடைந்தான். விழித்துப் பார்த்தான். நடந்த வற்றைத் தோழர்கள் பதற்றத்தோடும், பயத்தோடும் கூறினார்கள்.

தியானம் செய்தால், நாகம்கூட விலகிச்செல்லும் என்ற உண்மைதனை அன்றே அவன் உணர்ந்தான்.

❑

## 8. துணிவே துணை!

ஒரு நாள் வீட்டிலிருந்து சற்று தொலைவில் நரேந்திரன் வழக்கம் போல் தோழர்களுடன் சாலையில் விளையாடிக் கொண்டிருந்தான். அப்போது அவனுக்கு ஆறு வயதே.

அப்போது அங்கே ஒரு பெண்ணின் அலறல் சத்தம் கேட்டது. உடனே சாலையைத் திரும்பிப் பார்த்தான்.

குதிரை வண்டி ஒன்று மிக வேகமாக ஓடி வந்து கொண்டிருந்தது. வீட்டை விட்டு தவழ்ந்து வந்த குழந்தை அதன் தாயின் கவனக்குறைவால் குதிரை வண்டியின் மிக அருகில் வந்துவிட்டது. அதையும் பார்த்துவிட்டான்.

அந்த இக்கட்டான - ஆபத்தான காட்சியைப் பார்த்துத்தான் அந்தத் தாய் செய்வதறியாது அலறினாள்...

நரேந்திரனோடு விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்கள் எல்லாம் குதிரை வண்டி வேகமாக ஓடி வருவதைக் கண்டு சிதறி ஓடிப்போனார்கள்.

நரேந்திரன் நிலைமையை உடனே புரிந்து கொண்டான். மற்றவர்களைப்போல் பயந்து நிற்க வில்லை; ஓடவில்லை. அதற்குமேல் எதையும் சிந்திக்கவும் இல்லை.

வேங்கையென குழந்தையை நோக்கிப் பாய்ந்தான். அடுத்த நொடியே குழந்தையோடு பாதையோரம் வந்துவிட்டான்.

குதிரை வண்டி சாலையில் மின்னல் வேகத்தில் தொடர்ந்து அவனைத் தாண்டி ஓடிக் கொண்டிருந்தது.

சாலையின் ஓரம் நின்று இக்காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தவர்கள் எல்லாம் வியப்பில் வீழ்ந்து போனார்கள்.

தன் குழந்தையைப் பாய்ந்து சென்று துணிச்சலோடு காப்பாற்றிய நரேந்திரனை அந்தக் குழந்தையின் தாய் பார்த்து ஓடி வந்தார்.

நரேந்திரனின் கையிலிருந்த குழந்தையை வாங்கி கீழே விட்டார். நரேந்திரனை வாரியணைத்துக் கொண்டார், கண்களில் நீர் வழிய -

"கண்ணே...! எனக்கு ஒரே குழந்தை. இன்று முதல் நீ என் முதல் குழந்தையாகி விட்டாய். நீ சாதாரணக் குழந்தையா? இல்லை. என் கண்ணெதிரே தோன்றிய தெய்வம்...!" என்று பாராட்டியதோடு, அவனின் கன்னங்களில் மாறி மாறி முத்தமிட்டாள்.

நரேந்திரன் யார் என்பதை அறிந்துகொண்ட அத்தாய், "என் தெய்வமே...! உன் தாயை நான் பார்க்க வேண்டுமே..." என்றாள்.

"அதற்கென்ன, பார்த்தால் போயிற்று..." என்றான் நரேந்திரன்.

நரேந்திரனைக் கீழே இறக்கிவிட்டு, தன் குழந்தையைத் தூக்கி இடுப்பில் வைத்துக்கொண்டாள்.

நரேந்திரன் முன் நடக்க, பின் தொடர்ந்து நடந்தாள் அந்தப் பெண். அவர்களோடு சாலையில் வேடிக்கைப் பார்த்துக் கொண்டு நின்றிருந்தவர்களும் சென்றனர்.

மாளிகையின் உள்ளே நுழைந்ததும், "அம்மா..." என்று குரல் கொடுத்தான் நரேந்திரன்.

"என்னப்பா...?" என்று கேட்டுக்கொண்டே புவனேஸ்வரி அம்மாள் வெளியே வந்தாள்.

அங்கே மகனோடு ஒரு கூட்டமே நிற்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்தாள்.

'மகன் இன்று எந்த வம்பை விலைக்கு வாங்கிக் கொண்டு வந்தானோ...? ஒரு கூட்டமே வந்திருக்கிறதே..." என்று கலக்கத்தோடு மகனிடம் வந்தாள்.

குழந்தையோடு வந்த அந்தப் பெண்மணி அடக்கத்தோடு தன் குழந்தையை புவனேஸ்வரி அம்மாளின் காலடியில் போட்டுவிட்டு, அவளும் விழுந்து வணங்கினாள்.

ஏதும் புரியாத நிலையில் நின்றிருந்தாள், புவனேஸ்வரி அம்மாள்.

அந்தப் பெண்ணே பேசினாள்: "என் ஒரே மகன் உங்கள் மகனால்தான் இன்று உயிர் பிழைத்தான்..." என்று கூறி, நடந்ததையெல்லாம் கூறியதோடு, "நீங்கள் ரொம்பவும் பெரியவர்கள். உங்கள் ஆசிர்வாதம் என் குழந்தைக்கு வேண்டும்..." என்று கண்களில் நீர் வடிய வேண்டினாள்.

மகன் நல்ல செயலைச் செய்வான் என்று அந்தத் தாய் அன்றுதான் நம்பினாள்.

வீட்டையே வியப்போடு பார்த்துக்கொண்டு நின்றிருந்த கூட்டத்தினர் அனைவருக்கும் சிற்றுண்டி வழங்கி அன்புடன் அனுப்பி வைத்தாள் அந்தத் தாய்.

பின் ஆனந்தப் பெருக்கோடு மகனை ஆரத் தழுவியதோடு, "மகனே! நீ தைரியமாகக் குழந்தையைக் காப்பாற்றியதற்காக நான் மகிழ்ச்சி அடைகிறேன். நீ எப்போதும் எதிலும் உறுதியுடன் இருக்க வேண்டும். கோழைத்தனத்தைப் போல் கொடியது வேறில்லை..." என்று கூறி வாழ்த்தினாள்.

நரேந்திரன் சாதாரணக் குழந்தை அல்ல; சராசரிக் குழந்தையும் அல்ல; அவன் ஒரு தெய்வக் குழந்தை என்பதும் அவனது ஆறாவது வயதிலேயே தெளிவாய் தெரிந்தது.

❑



# 9. பட்டுத் துண்டும் பரதேசியும்!

இளம் வயதிலேயே புல்லையும், புள்ளையும் நேசிப்பவனாக இருந்தான், நரேந்திரன்.

அவன் மனிதர்களை நேசிப்பதில் என்ன வியப்பு இருக்கிறது?

அன்று பண்டிகை நாள். அதனால், தன் செல்ல மகனை அழகு படுத்தினாள், தாய்.

மகனுக்கு பட்டுத் துண்டை கட்டிப் பட்டுச் சட்டை போட்டு அழகு பார்த்து நின்றாள் தாய்.

நரேந்திரன் புதுத் துணிகள் அணிந்த நிலையில் முற்றத்தை அடைந்தான். அந்த வேளையில் அவர்கள் வீட்டு மரக்கிளையில் குடியிருந்த ஒரு குரங்கு அவனை நோக்கி ஓடிவந்தது. அதோடு அவன் விளையாடிக் கொண்டிருந்தான்.

அப்போது... "ஓம் நமச்சிவாயா...! ஓம் நமச்சிவாயா...! என்ற குரல் கேட்டு தெருவைப் பார்த்தான்.

அங்கே பிச்சை கேட்டபடி ஒரு சாமியார் நின்று கொண்டிருந்தார்.

உடனே வெளியே சென்றான். சாமியார் கிழிந்த துண்டோடும், கிழிந்த வேட்டியோடும் நின்றிருப்பதைக்

கண்டு வேதனையோடு, ''ஏன் சாமி... இப்படி கிழிந்த துணிகளை அணிந்து கொண்டிருக்கிறீர்கள்...?'' - கேட்டான், நரேந்திரன்.

தன் எதிரே நின்று கேட்ட அவனையும், அவனது வயதையும் கண்டு, 'இந்தச் சிறு உள்ளத்தில் இப்படி ஒரு கேள்வியா...?' என்று சாது வியந்தார்.

''மகனே...! நான் ஏழை. அதுவும் பிச்சைக்காரன். புதுத்துணிக்கு எங்கே போவேன்...? பணமில்லாமல் நான் எப்படி புதுத்துணி வாங்க இயலும்?'' - சாது வேதனையோடு வார்த்தைகளை வெளிப்படுத்தினார்.

''ஐயா... முதலில் உங்கள் தோள்மேல் கிடக்கும் துண்டை எடுத்துக் கீழே போடுங்கள்...'' என்றான்.

அவன் சொன்னது புரியாமல் விழித்துக் கொண்டிருந்தார் சாது.

அவரிடம் வற்புறுத்தி அந்த கிழிந்த துண்டைப் பெற்ற நரேந்திரன், ஓடிச்சென்று மதிற்சுவருக்கு வெளியே எறிந்தான்.

பின் சாதுவிடம் ஓடிவந்து தான் கட்டியிருந்த பட்டுத் துண்டை எடுத்து கொடுத்து போட்டுக் கொள்ளச் சொன்னான்.

சாது கூச்சத்தோடு, ''வேண்டாம். நீங்களே போட்டுக் கொள்ளுங்கள்...'' என்று மறுத்து நின்றார்.

விடுவானா நரேந்திரன்...? சாது மறுத்தும் பிடிவாதமாக அவரிடம் கொடுத்தான்.

சாது மனமில்லாமலேயே அதை வாங்கிக் கொண்டார்; தோளிலும் போட்டுக் கொண்டார்.

அதே வேளையில் பிச்சை கேட்டவருக்கு ஒரு பாத்திரத்தில் அரிசியோடு வந்தாள், நரேந்திரனின் தாய்.

தன் செல்ல மகன் சட்டையோடு நிற்பதையும், சாதுவின் தோளில் பட்டுத்துண்டு கிடப்பதையும் கண்டாள்.

என்ன நடந்திருக்கும் என்பதை அவள் அறிந்து கொண்டாள். நல்ல நாள் அன்று பிள்ளையை எதுவும் சொல்ல வேண்டாம் - தண்ணீரை ஊற்றித் தண்டனை கொடுக்க வேண்டாம் என்ற எண்ணத்தோடு, சாதுவிற்குக் கொண்டுவந்த அரிசியைப் போட்டுவிட்டு, இல்லத்திற்குத் திரும்பினாள் தாய்.

சாது, நரேந்திரனை மனதார வாழ்த்தியபடியே அடுத்த வீட்டை நோக்கி நடக்கத் தொடங்கினார்.

❑



# 10. நரேந்திரனின் விவேகம்!

நரேந்திரன் அடிக்கடி நண்பர்களைப் படகில் ஏற்றிக்கொண்டு உல்லாசமாக பொழுதைக் கழிப்பான்.

அப்படி ஒரு நாள் படகில் திரும்பி வரும்போது நண்பர்களில் ஒருவன் வாந்தி எடுத்துவிட்டான்.

அதைக்கண்டு படகுக்காரருக்கு ஏகக் கோபம் வந்துவிட்டது. "உங்களை நான் கரையில் இறக்கிவிட வேண்டுமானால், இந்தப் படகைச் சுத்தம் செய்தால் தான் அது நடக்கும்..." என்றார்.

எல்லோரும் சிறுவர்கள்தானே... அதனால் பயந்து நடுங்கிக்கொண்டு நின்றிருந்தனர்.

ஆனால், யாருக்கும் தெரியாமல் மறைந்து மறைந்து நரேந்திரன் படகிலிருந்து கரையில் இறங்கி விட்டான்.

அதேவேளையில் கங்கைக் கரையில் இரு ஆங்கிலச் சிப்பாய்கள் சென்று கொண்டிருப்பதைக் கண்டான்.

உடனே நரேந்திரன் அவர்களிடம் ஓடிச் சென்று தனக்குத்தெரிந்த அரைகுறை ஆங்கிலத்தில், "ஐயா...! இப்படகோட்டிகள் என் நண்பர்களை கீழே இறக்கி விட மறுக்கிறார்கள்..." என்று பணிவோடு வேண்டி நின்றான்.

அந்தச் சிப்பாய்கள் உடனே சென்று படகோட்டி களை நோக்கி, "பாதுகாப்பாக குழந்தைகளை கீழே இறக்கிவிடுங்கள்..." என்று கட்டளையிட, அவர்களும் இறக்கிவிட்டார்கள்.

நண்பர்கள் அனைவரும், நரேந்திரனின் அறிவு நுட்பத்தைப் பாராட்டினர். ❑

## 11. சாதி எப்படி இருக்கும்...?

**ந**ரேந்திரனின் தந்தையாரைக் காண பல இன - மத நண்பர்கள் வருவார்கள்.

அப்படி ஒரு நாள் முஸ்லிம் நண்பர் ஒருவர் வந்திருந்தார். வந்தவர், சிறுவனாக இருந்த நரேந்திரனுக்கு அவர் கையாலேயே இனிப்பு ஊட்டினார்.

இதைத்திரைக்குப் பின்னாலிருந்து கவனித்த அவனது தாயார், நரேந்திரனை அழைத்து, "நீ அவருடைய கையிலிருந்து இனிப்பு சாப்பிட்டாயா?" என்று கேட்டாள்.

"சாப்பிட்டால் என்ன...?" என்று கேட்டான்.

"மற்ற சாதியினரின் கையிலிருந்து நாம் உண்டால், நமது ஜாதிக்கு இழிவு வந்துவிடும்..." என்றாள் அன்னை.

நரேந்திரன் தந்தையார் அலுவலக அறையில் வெவ்வேறு குலத்தினருடைய உபயோகத்திற்காக மூன்று ஹுக்காக்கள் இருந்தன.

யாருமில்லாத சமயமாகப் பார்த்து அறையினுள் நுழைந்த நரேந்திரன், அங்கிருந்த ஒவ்வொரு

ஹுக்காக்களிலும் வாயை வைத்து இழுத்துக் கொண்டிருந்தான்.

அறையில் சத்தத்தைக் கேட்டு உள்ளே நுழைந்த தந்தையார் திகைத்துப்போய், "ஏ, மகனே...! நீ என்ன பண்ணுகிறாய்...?" என்று கேட்டார்.

"ஒன்றுமில்லையப்பா... ஜாதி எப்படி கெட்டுப் போகிறதென்று பார்க்கின்றேன்..." என்று அமைதியாக பதில் சொன்னான், நரேந்திரன்.

அறநெறியில் வாழ்கின்ற விசுவநாதர், 'இவன் சாதாரணப் பையனல்லன்...' என்று மனதுள் எண்ணியபடியே வெளியே சென்றார்.

❑



## 12. தியானத்தில் பாம்பு...!

நரேந்திரனுக்கு வேறொரு விளையாட்டிலும் விருப்பம் இருந்தது. அது இதுதான்.

அவன் வீட்டின் மூன்றாவது மாடியில் உள்ள ஓர் அறையில் இரண்டொரு தோழர்களைச் சேர்த்துக் கொண்டு அமைதியாக அமர்ந்து தியானம் செய்வான்.

அவனுடைய தோழர்களால் அதிக நேரம் உட்கார இயலாது. நரேந்திரனோ, தன்னை மறந்து தியானத்தில் மூழ்கிவிடுவான்.

அவ்வேளையில் யார் கூப்பிட்டாலும், அவனுக்கு காதில் கேட்காது. ஒருநாள் என்ன நடந்தது தெரியுமா...?

எங்கிருந்தோ ஒரு பாம்பு அவர்கள் தியானம் செய்து கொண்டிருக்கும்பொழுது நரேந்திரனின் முன் படம் எடுத்தபடி வந்து நின்றது.

இதைக்கண்ட தோழர்கள், "ஐயோ... அம்மா..." என்று கூச்சலிட்டு ஓடிச் சென்று, அவனின் அன்னையிடம் கூறினர்.

பதறியபடியே தாய் ஓடிவந்து பார்த்தார். அங்கே பாம்பைக் காணோம்.

அன்னை அவனை அழைத்துக்கொண்டு கீழே வந்தாள்.

புவனேஸ்வரி தேவிக்கு தன் மகன் எங்கிருந்து வந்து பிறந்திருக்கிறான் என்பது நன்கு தெரியுமே...

ஆகவே அவனுக்கு சிவபூஜை செய்கின்ற முறையைக் கற்றுக் கொடுத்தாள்.

❑

# 13. நான் துறவி வேந்தன்

நரேந்திரன்தான் தன் நண்பர்கள் கூட்டத்திற்குத் தலைவன். அறிவுரை கூறிக்கொண்டே கஷ்ட நஷ்ட காலங்களில் உடனிருந்து காப்பாற்றுபவன்.

இதனால் நண்பர்களிடம் அவனுக்கு மிகுந்த அன்பும் மரியாதையும் உண்டு.

அவன் இல்லாவிட்டால் நண்பர்களுக்கு விளை யாட்டே இனிக்காது. அவன் வந்துவிட்டால் ஆனந்தம் தான். தினமும் புதிது புதிதான ஆட்டங்கள் தொடரும்.

அவர்களுக்கு மிகவும் பிடித்தமான விளையாட்டு ஒன்று இருந்தது. அந்த விளையாட்டைத்தான் எப்போதும் அவர்கள் ஆடுவார்கள்.

அதுதான் 'ராஜா' விளையாட்டு. வீட்டில் பூஜை மண்டபத்துப் படிகளில் மேல்படிதான் ராஜாவின் சிம்மாசனம்.

அதன் மீது ராஜா உட்கார்ந்து கொள்வார். அந்த ராஜா வேறு யாருமல்ல, நமது நரேந்திரன்தான்.

மற்ற பிள்ளைகளில் ஒருவன் மந்திரி. இன்னொருவன் சேனாதிபதி. கீழ்ப்படிகளில் மற்றவர்கள் அமர்வார்கள்.

அவ்வேளையில் உண்மையாகவே ஏதோ ஒரு தேசத்து ராஜாவைப் போல ராஜகம்பீரத்துடன் காணப்படுவான் நரேந்திரன்.

விளையாட்டு முடிவில் அவன் கம்பிரக் குரலில், "நான் பெரியவனானதும் ஒரு ராஜாவாக ஆவேன். இல்லையேல், முற்றும் துறந்த துறவி வேந்தனா வேன்..." என்று கூறுவான்.

❑

## 14. குதிரை வண்டி ஓட்டுவேன்!

நரேந்திரன் வீட்டில் இருப்பதைவிட வெளியே சென்று விளையாடுவதையே விரும்புவான். அடிக்கடி வண்டியில் செல்வதையும் விரும்புவான்.

சில சமயங்களில் குதிரை வண்டியில் போகும் போது, வண்டி ஓட்டுபவன் அருகில் அமர்ந்து கொண்டு செல்வான்.

வண்டி ஓட்டுபவன் நரேந்திரனிடம் அன்பாக இருப்பான். அவனும் அப்படியே.

'குதிரைகளை இவ்வளவு சுறுசுறுப்பாக எப்படி காத்து வருகிறான்...?' என்று சிந்திப்பான் நரேந்திரன்.

ஒருநாள் அவனுடைய தந்தையார், நரேந்திரனை நோக்கி, "அப்பா, மகனே...! நீ பெரியவனாக வளர்ந்ததும் என்ன செய்யப் போகிறாய்..." என்று கேட்டார்.

"குதிரை வண்டி ஓட்டுவேன்..." என்று பட்டென்று பதில் அளித்தான், நரேந்திரன்.

❑

## 15. சிவன் எங்கே இருக்கிறார்...?

அக்காலத்தில் கொல்கத்தா வீதிகளின் இரு பக்கங்களிலும் உள்ள சாக்கடைகள் மூடப்படாததாக இருக்குமாம்.

இந்த நிலையில் வீட்டினுள் குறும்பு செய்துவிட்டு வெளியே ஓடிவந்து அந்த சாக்கடைக்குள் நின்று விடுவான் நரேந்திரன்.

அவனது மூத்த சகோதரிகள் துரத்தி வந்தால், சாக்கடையில் இறங்கி நின்றபடியே, "வா, பிடிக்க வா..." என்பானாம்.

எப்படி அவர்கள் சாக்கடைக்குள் இறங்குவார்கள்?

அவர்கள் சாக்கடையில் இறங்கினால், குளிக்க வேண்டும் என்பது அவனுக்குத் தெரியாததா என்ன?

இறுதியில் தாயார் வந்து நரேந்திரனை இழுத்துச் சென்று குழாயடியில் அமர வைத்து, குழாயைத் திறந்து விடுவாள்.

போதாதக் குறைக்கு குடம் குடமாய் நிறைய நீரை எடுத்து 'நமச்சிவாய' என்று கூறிக்கொண்டே அவன் தலைமேல் ஊற்றுவாள்.

என்ன ஆச்சரியம்...! நரேந்திரன் இந்த மந்திரத்தைக் கேட்டவுடனே சாந்தமடைந்துவிடுவான்.

“அம்மா...! சிவன் எங்கே இருக்கிறார்...?” என்று தாயைக் கேட்பான், நரேந்திரன்.

“நீதான் சிவனிடமிருந்து வந்திருக்கிறாயே... சிவபெருமான் தானே வராமல், தன்னுடைய பூதங்களில் ஒன்றை அனுப்பியுள்ளார்.

அதிக குறும்புத்தனம் செய்தால் சிவபெருமான் மீண்டும் தன்னிடத்தில் உன்னை அழைத்துக் கொள்ளமாட்டார்...” என்று பதில் உரைப்பாள்.

அதைக்கேட்டு அவன் மனம் சிவசிந்தனையில் ஆழ்ந்துவிடும்.

❑



## 16. பேய் பிடிக்குமா...?

நரேந்திரன் இளம் வயதிலேயே தைரியம் மிக்கவனாக இருந்தான் என்பதற்கு இந்த நிகழ்வே முன் நிற்கிறது.

அவன் வீட்டிற்கு அருகில் ஒரு செண்பக மரம் இருந்தது.

சில தோழர்களுடன் அங்கே சென்று அந்த மரத்தில் ஏறி, கிளைகளில் தொங்கி விளையாடுவது அவனுக்குப் பிடித்தமான விளையாட்டு.

கிளைகளில் இரு கால்களையும் மாட்டிக்கொண்டு, தலைகீழாக தொங்கியபடியே இரண்டு கைகளையும் விரித்து ஜாலியாக ஊஞ்சல் ஆடுவான்.

ஒருநாள் இவன் அப்படி ஆடுவதைப் பார்த்து பயந்துபோன பக்கத்து வீட்டுப் பெரியவர் திடுக்கிட்டார்.

“அடே... பையன்களா... இந்த மரத்தில் ஒரு பேய் இருக்கிறது. அந்தப் பேய் உங்களைப் பிடிச்சுகிட்டு போயிடும். அதனால, எல்லோரும் ஓடுங்கடா...” என்றார்.

அதைக் கேட்டதும் நரேந்திரனுடன் விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்கள் எல்லாம் பயந்து ஓடி விட்டார்கள்.

ஆனால், நரேந்திரன் மட்டும் கிளைக்குக் கிளை தாவியும், தொங்கியும் விளையாடிக் கொண்டிருந்தான்.

'ஏன் இந்தப் பையன் மட்டும் போகாமல் இருக்கிறான்? ஒருவேளை நான் சொல்வதை நம்ப வில்லையோ...?'

"ஏண்டா தம்பி... பேய்க்கு நீ பயப்பட மாட்டாயா...?" என்று கேட்டார்.

"இல்லாத ஒன்றுக்காக நான் ஏன் பயப்பட வேண்டும்? அது சரி... மரத்தில் ஏறுபவர்களை மட்டும்தான் பேய் பிடிக்குமா? இறங்கி வந்து இந்த வீட்டுக்காரரான உங்களை வந்து அது பிடிக்காதா...?" என்று கேட்டான்.

அவ்வளவுதான்... இவனிடம் நாம் சமாளிக்க முடியாது என்ற நிலையில், பெரியவர் அங்கிருந்து போய்விட்டார்.

சிரித்தபடியே மீண்டும் மரக்கிளையில் தொங்கி விளையாடத் தொடங்கினான், நரேந்திரன்.

❑



## 17. தோழனுக்குத் தோள் கொடுத்தான்

நரேந்திரனிடம் முரட்டுத் தைரியம் மட்டுமல்ல... அந்தத் தைரியமான மனத்துக்குள் இரக்கமும் இருந்தது. இரும்பு மனத்துள் இரக்கமும் இருந்ததே அதுதான் நரேந்திரனின் குணச் சிறப்பு.

நரேந்திரன் கல்லூரியில் படித்துக் கொண்டிருந் தான்.

அவனோடு ஓர் ஏழை மாணவனும் படித்தான். அவன் தேர்வுக் கட்டணம் கட்ட முடியாத நிலையில் வறுமைப்பட்டிருந்தான்.

அந்த ஆண்டு அவன் தேர்வு எழுதவில்லை யென்றால், அவனின் ஓராண்டு படிப்பு வீணாகப் போய்விடும்.

நரேந்திரனிடம் பணம் இல்லை. ஆனால், மனமிருந்தது. உள்ளத்தில் உறுதியிருந்தது; தெளிவிருந்தது.

நண்பனுக்காக அலுவலரிடம் கெஞ்சிக் கூத்தாடி என்பார்களே அந்த நிலையில் போராடி, அவன் தேர்வு எழுத அனுமதி பெற்றுத் தந்தான்.

இப்படி இளமையிலேயே பிறர் நலம் பேணு வதில் மகிழ்வு கொண்டிருந்தான், நரேந்திரன்.

❑

## 18. நீதி கேட்டு...

நோயின் காரணமாக இறந்து போனார், விசுவநாதர்.

நரேந்திரனின் தந்தை விசுவநாதர் சம்பாதித்த பணம் ஏராளம், ஏராளம்.

ஆனால், அவரும், அவர் மனைவியும் இரக்கக் குணம் கொண்டவர்களாக இருந்ததால், அந்தச் செல்வத்தில் சிறிதுகூட இல்லாது போய்விட்டது.

தாய் புவனேஸ்வரி, இரண்டு சகோதரிகள், நரேந்திரன் ஆகியோர் அவர்கள் குடும்பத்தில் இருந்தனர். அவர்கள் குடும்பத்தில் இருள் சூழ்ந்தது.

குடும்பப்பொறுப்பு நரேந்திரனின் தலையில் ஏறியது. சுகமான சுமையாக ஏற்றானே தவிர, கலங்கவில்லை.

தந்தை இறந்தபோது அவன் சட்டக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தான்.

நெடுந்தூரத்தில் இருந்த கல்லூரிக்கு நடந்தே போனான். பலநாள் சாப்பிடாமலேயே நாட்களைக் கழித்தான். தாய்க்கு எந்த நிலையிலும் துன்பமும் கவலையும் வந்துவிடக்கூடாது என்பதில் கவனமாக இருந்தான்.

இந்த வேளையில், அவனுடைய உறவுகள், அவர்கள் விட்டில் தங்களுக்கும் பங்கு இருப்பதாகச் சொல்லி வழக்கு போட்டார்கள்.

எந்த நீதிமன்றத்தில் தந்தை வழக்கறிஞராக இருந்தாரோ, அதே நீதிமன்றத்தில் கட்சிக்காரனாக நரேந்திரன் நின்றான்.

இதுதான் விதியின் விளையாட்டோ...? நீதி மன்றத்தில் நரேந்திரனின் வாதத்திறமை வழக்கறிஞர் களை வியப்பில் ஆழ்த்தியது.

வழக்கு அவனுக்குச் சாதகமாகவே முடிந்தது. தாய்க்கு பெரும் மகிழ்ச்சியானது.

வீட்டில் பங்குபோட வந்த பங்காளிகள் பதறி ஓடிப் போயினர்.

“என் மகனே...! உன் தந்தை எத்தனையோ பேருக்கு நல்ல தீர்ப்பு வாங்கிக் கொடுத்திருக்கிறார். அந்தப் புண்ணியம் வீண் போகவில்லை...” என்று கூறி, நரேந்திரனை முத்தமிட்டு வாழ்த்தினார்.

❑



## 19. உப்புமாவா, அல்வாவா?

விவேகானந்தரின் வாழ்க்கையில் பல அரிய செய்திகள் உண்டு. அவரது வாழ்க்கை அத்தகையது.

இந்தச் செய்தி அவரது வாழ்க்கை வரலாற்றில் குறிப்பிடப்படாத ஒன்றாகும்.

தமிழ்நாட்டில் ஓர் ஊரில் அவர் தங்கிருந்தபோது அவருக்கு தமிழ்ச் சீடர்களில் ஒருவர் தம் வீட்டில் உப்புமா செய்து அவர்முன் கொண்டு வந்து வைத்தார்.

அதைக் கண்ட விவேகானந்தர், "இது என்ன உணவு...?" என்று கேட்டார்.

"உப்புமா...?"

"உப்புமா என்றால் என்ன...?"

விவேகானந்தர் இப்படி கேட்டதும், இதை எப்படி விளக்கிக் கூறுவது என்ற நிலையில் அங்கிருந்த சீடர்கள் ஒருவரை ஒருவர் பார்த்து செய்வதறியாது நின்றிருந்தனர். அப்போது கணிதப் புலமை கொண்ட ஒரு தமிழர்....

உப்புமா - அல்வா - சர்க்கரை+உப்பு என்று தமது பீஜகணித அறிவோடு விளக்கமளித்தார்.

வங்கத்தைச் சேர்ந்த விவேகானந்தருக்கு... அவர் சொன்ன அல்வா - உப்புமா விளக்கம் விளங்க வில்லை.

உப்புமாவை உண்டு பார்த்த பின்புதான் 'இப்படிப்பட்டது' என்று அறிந்து கொண்டார், விவேகானந்தர்.

வேதாந்தமும் ஞானமும் சொல்லித் தெரிவ தில்லை; அனுபவித்துத் தெரிந்து கொள்ள வேண்டியது தானே.

உப்புமாவின் சுவை கண்ட பின், பலகார உலகில் அல்வா முதலியவற்றைப்போல் உப்புமாவுக்கும் ஓர் இடம் உண்டுதான் என்று ஒப்புக் கொண்டது ஞானியான விவேகானந்தரின் உள்ளம்.

❑



## 20. எங்களைப்போல நீரும்....

**வி**வேகானந்தர் ஒரு சமயம் இரயிலில் பயணம் செய்து கொண்டு இருந்தார்.

அவர் துறவி என்பதால் கையில் காசு வைத்துக் கொள்ளவில்லை.

அதே பெட்டியில் அவருக்கு எதிரே அமர்ந்து இருந்த செல்வந்தர் இருவர் அவ்வப்போது அந்த இரயில் ஸ்டேசனில் நிற்கும்போது எல்லாம் விதவிதமான பலகாரங்களை வாங்கிச் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர்.

ஒரு கட்டத்தில் அவர்கள் விவேகானந்தரைப் பார்த்து, "என்ன சாமியாரே! இரண்டு காசு சம்பாதிக்கும் அளவில் படித்திருந்தால், எங்களைப்போல நீரும் வேண்டியவைகளை திருப்தியாக வாங்கிச் சாப்பிட லாம் அல்லவா?" என ஏளனமாகப் பேசினார்கள்.

விவேகானந்தர் இள நகையோடு மவுனமாய் இருந்தார்.

இரயில் ஒரு ஸ்டேசனில் நின்றது. சிறிது நேரத்தில் பிளாட்பாரத்தில் ஒரு மனிதர் கையில் ஏதோ பொருள்களை துணியால் மூடிக் கொண்டு ஆவலோடு வந்தபடியே...

"விவேகானந்தர் சுவாமி எங்கே இருக்கிறார்? சுவாமி எங்கே இருக்கிறார்...?" என்று சப்தமிட்டுக் கொண்டே வந்தவர் -

விவேகானந்தர் இருந்த பெட்டியில் அவரைக் கண்டுவிட்டு மகிழ்ச்சியோடு, "சுவாமிஜி! இங்கேதான் இருக்கிறீர்களா?" என்று கேட்டபடியே பெட்டியில் ஏறி வந்து, தான் கொண்டு வந்திருந்த பண்டங்களை எல்லாம் அவர் முன்னே படைத்தார்.

அதைக் கண்டு எதிரே அமர்ந்திருந்த இரு செல்வந்தர்களும் திகைத்தனர்.

விவேகானந்தரும் திகைத்தபடி, "நீங்கள் யார், இந்தப் பலகாரங்களை யாருக்காகக் கொண்டு வந்தீர்கள்?" என அந்த நபரைப் பார்த்து விசாரித்தார்.

அதற்கு அந்த நபர், "சுவாமிஜி! நான் இந்த இரயில் நிலையம் அருகே பெரிய பலகாரக்கடை ஒன்றை வைத்திருக்கிறேன்.

சற்று நேரத்திற்கு முன்பு கடையில் அதிக வியாபாரம் இல்லாத நிலையில் சிறிது கண்ணயர்ந் தேன்.

அந்த சமயம் உங்களைப் போன்ற ஒருவர் என் கனவில் தோன்றி, 'என்ன நீ இங்கே தூங்கிக் கொண்டு இருக்கிறாய்? வரப்போகிற இரயிலில் விவேகானந்தர் பசியோடு வந்து கொண்டிருக்கிறாரே, அவரைப்போய் நீ கவனிக்க வேண்டாமா?' என்று கேட்பதுபோல் கனவு தோன்றவே திடுக்கிட்டு விழித்தேன்.

உடனே, கடையில் இருந்து பலகாரங்களை எடுத்துக் கொண்டு தங்களைச் சந்திக்க ஓடி வந்தேன்..." என்று கூறினார்.

இதைக் கேட்டு, சற்று முன் ஏளனம் பேசிய செல்வந்தர்கள் விவேகானந்தரிடம், மன்னிப்புக் கேட்டுக் கொண்டனர்.

❑

## 21. அன்னையிடம்...

விவேகானந்தரின் தந்தையார் இறந்துபட்டதும், குடும்பம் வறுமைப்பட்டுப் போனது.

குடும்பச் சுமை அவருக்கு வந்தது. ஏற்றுக் கொண்டார்.

குடும்பத்தின் துயர நிலைமையையும் உணர்ந்தார். துன்பமும் வறுமையும் தாண்டவமாடும் பொழுது இறை நம்பிக்கை எங்கேயோ பறந்து ஓடிவிடுகிறது.

மனவேதனையோடுட தன் குருநாதர் தங்கியிருந்த தட்சிணேசுவரத்திற்குச் சென்று அவரிடம், ''பசிப் பிணியால் வாடுபவர்களுக்குச் சமயம் காதில் ஏறாது என்று கூறினீர்களே?

உங்களுடைய அன்னையாகிய காளிதேவியிடம் கூறி உணவிற்கும், உடைக்கும் ஏற்பட்டுள்ள எனது வறுமை நிலையைப் போக்குங்கள்'' என்றார்.

''நீதான் என் அன்னையை ஏற்க மாட்டேன் என்கிறாயே? என் அன்னை பராசக்தி உன்னைப் பரிசோதிக்கிறாள். இன்று செவ்வாய்க் கிழமை. இன்று இரவு அன்னையிடம் சென்று பிரார்த்தனை செய்து கொள். எது கேட்கிறாயோ அது உனக்குக் கிடைக்கும்'' என்றார், ஸ்ரீ இராமகிருஷ்ணர்.

பகற் பொழுதை குருதேவருடன் மகிழ்ச்சியாகக் கழித்தார். மாலையில் காளிதேவியின் ஆலயத்திற்குச் சென்றார்.

ஆலய தீப வெளிச்சத்தில் அன்னை பராசக்தியின் திருவுருவைக் கண்டார். தேவியை நோக்கி, ‘‘அம்மா, எனக்கு விவேக வைராக்கியத்தைக் கொடுப்பாயாக; கருணைக் கடலே, எனக்கு ஞானத்தை வழங்கு, பக்தியைத்தா’’ என்று உள்ளமுருக அன்னையை வேண்டினார்.

திரும்பி வந்த அவரைப் பார்த்ததும், ‘‘அன்னையிடம் என்ன வேண்டிப் பிரார்த்தித்தாய்?’’ என்று குரு கேட்டார்.

அப்போதுதான் அவருக்கு, தான் ஒன்று கேட்கப்போய் வேறு எதையோ கேட்டு வந்ததை உணர்ந்தார்.

அவரை மறுபடியும் குரு கோயிலுக்கு அனுப்பி வைத்தார்.

அவரும் சென்றார், உணவு, உடை ஆகியவற்றிற் காகவோ, அல்லது பணம் பொருளுக்காகவோ வேண்ட முடியவில்லை.

கற்பகத்தருவிடம் சென்று சுரைக்காயும், பூசணிக் காயுமா கேட்பது?

மூன்றாம் முறையாகச் சென்றபோதும் இவ்வாறே நிகழ்ந்தது. இதை உணர்ந்த ஸ்ரீ இராமகிருஷ்ணர், ‘‘உன் தலையில் உலக சுகத்தை இறைவன் எழுதி வைக்க வில்லை. உன் வீட்டார்களுடைய உணவிற்கும் உடைக்கும் என்றுமே பஞ்சம் ஏற்படாது என்று நான் ஆசிர்வதிக்கிறேன்...’’ என்று கனிவாய் கூறினார்.

❑

## 22. என்னால் எல்லாம் முடியும்...

ஹடயோகி ஒருவன் விவேகானந்தரிடம், தனக்கு ஆகாயத்தில் பறக்கச் சக்தி இருக்கிறதென்றும், பூமியின் கீழ் நீண்ட நேரம் புதையுண்டு கிடக்கும் திறமை உள்ளதென்றும், தண்ணீருக்குள் அதிக நேரம் மூழ்கியிருக்கும் திறமை உள்ளதென்றும் பெருமையாகச் சொன்னான்.

அதற்கு விவேகானந்தர், "அப்பா! பறவைகள் ஆகாயத்தில் பறக்கின்றன.

புழுக்கள் பூமியின் கீழ் அதிக காலம் இருக்கின்றன. மீன்கள் தண்ணீருக்குள்ளேயே தங்கள் வாழ்நாளைக் கழிக்கின்றன.

இவை எல்லாம் எனக்கும் சாத்தியம் என்கிறாய் நீ. இம்மாதிரி தாழ்ந்த ஜந்துக்களைப்போல நடப்பதனால் என்ன பயன்?

கடவுளைப்போல் நடக்க கருணை முதலிய நற்குணங்களை விருத்தி செய்.

கர்வத்தையும் கோபத்தையும் அடக்கிவிடு" என்றார்.

அப்பதிலைக் கேட்டு ஹடயோகி வெட்கிச் சென்றான்!

❑

## 23. இதில் அரசர் இல்லையே....

"என் குருநாதர் என்னிடம் விட்டுச் சென்ற கடமைகளை நான் செய்து முடிக்க வேண்டும். அதனால் நான் தனியே செல்கிறேன்" என்று சகோதர சீடர்களிடம் எல்லாம் சொல்லிவிட்டு, டில்லி வழியாக ராஜபுதினத்தை அடைந்தார்.

அங்கு அரசர்களின் ஆடம்பர வாழ்க்கையைக் கண்டார்...

ஆள்வார் சமஸ்தானத்தில் கடைவீதி ஓரம் தங்கியிருந்தார்.

விவேகானந்தரை நோக்கி, இரவும் பகலும் மக்கள் வந்து சந்தித்தனர். சிலர் கேள்விகள் கேட்டனர்; வேறு சிலர் அவர் பாடல்களைக் கேட்க விரும்பினர்.

இந்து, முஸ்லீம் என்ற எல்லா மதத்தினரும் அவருடன் கலந்து உரையாடினர். அவருடைய ஆன்மிகப் பேருரையில் அகம் மகிழ்ந்து போயினர்.

விவேகானந்தரின் செயல்பாடுகள் அரசருடைய திவானுக்கு தெரிய வந்தன.

அவர் ஒரு நாள் சுவாமிஜியைக் காண வந்தார்; திவான் கேட்ட கேள்விகளுக்கு சுவாமிஜி அளித்த பதில்களைக் கேட்டு அசந்து போனார்.

அதனால், எப்படியாவது அரசரைச் சந்திக்கச் செய்ய வேண்டும் என்ற எண்ணத்திற்கு வந்தார்.

ராஜாவிற்கு இந்தச் செய்தியைத் தெரிவித்ததும் அவரும் சுவாமிஜியைச் சந்திக்க விருப்பம்

தெரிவித்தார். அந்த சந்நியாசி ஆங்கிலம் போன்ற பலமொழிகளை அறிந்தவர் என்பதை திவான் வழியே அறிந்திருந்தார், அரசர்.

அதனால், சுவாமிஜியை சந்தித்த வேளையில் அரசர் சொன்னார். "சுவாமிஜிகளே! தாங்கள் ஒரு பெரிய பண்டிதர் என்று கேள்விப்பட்டுள்ளேன். நீர் விரும்பினால் மிகுதியாக பணம் ஈட்ட முடியும். அதை விட்டுவிட்டு ஏன் இப்படி பிச்சை எடுத்து வாழ்கிறீர்கள்?" என்று கேட்டார்.

சுவாமிஜி எந்தவித தயக்கமுமின்றி, "தாங்களோ அரசர், அரசியல் பணிகளைக் கவனிக்காமல் நீங்கள் ஆங்கிலேயர்களுடன் சேர்ந்து வேட்டையாடிக் கொண்டு ஏன் அலைகிறீர்கள்...?" என்று கேட்டார்.

"அது எமக்கு மகிழ்ச்சியைத் தருகிறது..." அரசர்.

"இது எமக்கு பேரானந்தத்தைத் தருகிறது" என்றார் சுவாமிஜி.

இந்த சந்நியாசி சாதாரண மனிதர் அல்ல என்பதை அரசர் உணர்ந்தார்.

"சுவாமிஜி, நான் உருவ வழிபாட்டில் நம்பிக்கை இல்லாதவன். அதனால், என்னுள்ளம் சாந்தி பெறுமா?" என்று அரசர் கேட்டபோது -

"மகாராஜா, நீங்கள் என்னை ஏளனம் செய்கிறீர் போலும்..." என்று சொன்னார்.

அப்போது, அங்கே சுவரில் மாட்டப்பட்டிருந்த படம் ஒன்றைக் காட்டி, "என்ன அது? மகாராஜாவின் படமா?" என்று கேட்டார்.

"ஆம்" என்றார், திவான்.

"அதை எடுத்து வர முடியுமா?" என்றார்.

இன்று இங்கே ஏதோ ஒன்று நடக்கப் போகிறது என்று நினைத்தனர்.

படம் சுவரிலிருந்து கழற்றப்பட்டு கொண்டு வரப்பட்டது.

அதை வாங்கிக் கொண்ட சுவாமிஜி "இங்குள்ளவர் யாரேனும் இப்படத்தின் மீது எச்சிலை காறித் துப்ப முன் வருவீர்களா?" என்று சுவாமிஜி கேட்டதும் அங்கே மௌனம் அரங்கேறி நின்றது.

சுவாமிஜி மீண்டும், "ஏன்? இதில் மகாராஜா இல்லையே? இது வெறும் காகிதமும், மையும் அதன் மேல் உள்ள அச்சும்தானே?" என்றார்.

அதற்கு எவரும் பதில் சொல்லாததால் மீண்டும் சுவாமிஜியே பேசினார். "இது உங்கள் மகாராஜாவின் உருவச் சின்னம். ஆகையால், நீங்கள் அதன் மேல் மரியாதை கொண்டுள்ளீர்கள். அதுதான் சரி. அதேபோல மரம், கல் ஆகியவற்றில் செய்யப்பட்ட தெய்வ வடிவங்கள் இறைவன் இல்லையாயினும் அவற்றைப் பார்த்ததும் பக்தர்களுக்கு பகவானுடைய ஞாபகம் மனத்தில் உண்டாகிறது.

ஆகவே, அவர்கள் அந்த உருவங்களுக்கு மரியாதைத் தருகிறார்கள்; பக்தி கொள்கிறார்கள்..." என்று கூறினார்.

ராஜா பணிவுடன் சுவாமிஜியைத் தலைவணங்கி, "நான் இதுவரை எண்ணியிருந்த பெரும் பிழை இன்று திருத்தப்பட்டது..." என்று கூறி, தன் தவறை உணர்ந்தார்.

பின் அவர் பக்தராகவே மாறிப்போனார்.

❑

## 24. வாழ்க்கை என்பது என்ன?

சுவாமிஜி, அபுமலையை அடைந்தார். அங்கு கேத்ரி சமஸ்தானத்துத் திவான் ஜகன் மோகன்லால், சுவாமிஜி அரசரைச் சந்திப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தார்.

அவர்கள் சந்திப்பு நடந்தது. அந்தச் சந்திப்பு, சரித்திர சந்திப்பு.

அரசர், சுவாமிஜியிடம் பணிவாகக் கேட்டார், "வாழ்க்கை எது? சமயம் யாது? கல்வி என்பது என்ன?'' என்று.

சுவாமிஜி, "பந்தத்திலிருந்து விடுதலை அடையச் செய்யும் முயற்சி தான் வாழ்க்கை.

சமயம் என்பது மனிதன் தன்னுள் உறைந்து கிடக்கும் தெய்வ சக்தியை வெளிப்படுத்துவதற்குச் செய்யும் சாதனைகளே!

ஒருவனை நிறை மனிதன் ஆக்குவது எதுவோ அதுவே கல்வி!'' என்று பதில் அளித்தார்.

அரசர் பெரு மகிழ்வு கொண்டு சுவாமிஜியை குருவாக ஏற்றார்.

தன்னுடன் சுவாமிஜியை கேத்ரிக்கு அழைத்துச் சென்று சில காலம் அவருக்குச் சேவை செய்தார்; பல செய்திகளை அவரிடமிருந்து அறிந்து கொண்டார்.

அரசை சிறப்பாக நடத்த வேண்டிய அறிவுரைகளை சுவாமிஜி அவருக்குக் கூறினார்.

மக்களுடைய குறைகளைக் கவனிப்பது, அவர்கள் முன்னேற்றம் அடைவதற்கான நல்ல செயல்களைச் செய்வது, இவைதாம் அரசனுடைய முக்கியமான கடமைகள் என்று சுவாமிஜி அவருடைய மனத்தில் பதியுமாறு செய்தார்.

இந்த காலகட்டத்தில்தான் சமஸ்தான பண்டிதரிடம் இருந்து பாணினி இலக்கணத்தை சுவாமிஜி கற்றார்.

சுவாமிஜியினால் இங்கும் பல நாட்கள் இருக்க முடியவில்லை. மீண்டும் தமது சமய வாழ்க்கையைத் தொடர்ந்தார்.

❑



## 25. அள்ளிக் கொடுக்க....

சுவாமிஜி, அமெரிக்காவில் தங்கியிருந்த வேளையில், ஒரு நாள் பட்டு மெத்தையில் ஓரிரவு படுக்க நேர்ந்தது.

அவர் படுக்கையை விட்டு கீழிறங்கி, வெறும் தரையில் படுத்து அழுது கொண்டே, இந்த நாட்டில் செல்வம் மிகுதியாக குவிந்து கிடக்கின்றதே?

என் தாய் நாட்டில் ஏன் அத்தகைய வறுமை? அதை எவ்வாறு போக்க முடியும்? என்றெல்லாம் சிந்திக்கலானார்.

இந்த நாட்டிலுள்ள செல்வத்தையும் விஞ்ஞானத் தந்திரங்களையும் பெற வேண்டுமானால் அவற் றிற்குப் பதிலாக ஏதாவது கொடுக்க வேண்டும்.

பாரத நாட்டிலும் பிறருக்கு அள்ளிக் கொடுக்கக் கூடிய ஒரு பெருமை வாய்ந்த பொருள் இருக்கிறது.

அதுதான் 'ஆன்மிகப் பெரும் செல்வம்' என்று அவருடைய பதில் கூறிற்று.

❑

## 26. முட்டாள்களைச் சந்திப்பது...

ஒரு சமயம் சுவாமி விவேகானந்தர் இரயிலில் பயணம் செய்து கொண்டிருந்தார்.

அப்போது அவர், காவியுடையுடன், தலையில் தலைப்பாகையோடு ஒரு சிறு பையுடன் இருந்தார்.

அதே பெட்டியில் அவர் இருக்கைக்கு அருகிலும் எதிரிலும் சில வெள்ளைக்கார சிப்பாய்கள் அமர்ந் திருந்தனர்.

சுவாமி விவேகானந்தரைப் பார்த்ததும் அவர் களுக்கு அவர் ஒரு பிச்சைக்காரர் என்று நினைத்து விட்டார்கள்.

அதனால் கேலியும் கிண்டலும் செய்து மிகக் கேவலமாக பேசிக் கொண்டே வந்தனர்.

அவர்கள் பேசிய கிண்டல்களுக்கும்; கேலிக்கும் ஆட்படாமல் தன் போக்கில் சிந்தித்துக் கொண் டிருந்தார்.

சேலம் வந்ததும், இரயில் நிலையத்தில் இறங்கிய விவேகானந்தர், நிலைய அதிகாரியிடம் ஆங்கிலத்தில் சரளமாகப் பேசியதைக் கண்ட சிப்பாய்கள் கவனித்தனர்.

இரயில் புறப்படும் நேரத்தில் இரயிலில் வந்து ஏறினார், சுவாமி விவேகானந்தர்.

இரயில் புறப்பட்டதும், ஒன்றுமே விளங்காத நிலையில் அமர்ந்து இருந்த அந்த வெள்ளைக்காரச் சிப்பாய்கள், கேட்டார்கள்.

''ஐயா உங்களுக்குத்தான் நன்றாக ஆங்கிலம் தெரிகிறதே, நாங்கள் உங்களைப் பற்றி கேவலமாக இழித்தும் பழித்தும் பேசிக் கொண்டு இருந்தபோது, நீங்கள் ஏன் எதுவும் எங்களிடம் பேசாமல் அமைதியாக அமர்ந்திருந்தீர்கள்?'' என்று கேட்டனர்.

அமைதியாக நம் விவேகானந்தர் சொன்னார், ''நான் முட்டாள்களைச் சந்திப்பது இது முதல் முறையல்ல.''

சிப்பாய்கள் எதிரியைக் கண்ட ஆமை தலையை உடலுக்குள் இழுத்துக் கொள்வதுபோல், முகத்தைத் திருப்பிக் கொண்டார்கள்.

❑



## 27. அடாத செயல் கண்டு....

கேத்ரி நகர் அரண்மனை வாசம். அரசர் நட்பு எல்லாம் சுவாஜிக்கு முன்பே கிடைத்த ஒன்றுதான். சுவாமிஜி அமெரிக்கா நாட்டில் நடைபெற்ற சர்வ சமய மாநாட்டுக்குச் செல்ல உதவிய பெருமக்களில் அரசரும் முக்கியமான வராயிற்றே!

சுவாமிஜியின் அறிவை உணர்ந்தவராயிற்றே! லிம்பிடியில் சுவாமிஜி தங்கியிருந்தபோது, அங்கு இருந்த ஜைன மடங்களுக்கும் சென்றார். மசூதி கட்டும் சென்றார்.

சுவாமிஜி ஒரு மடத்தில் தங்கியிருந்தபோது அம்மடத்தில் இருந்த துறவிகள் நடந்து கொண்ட ஒழுக்கக் கேடான செயல்களைக் கண்டு அவரின் உள்ளம் வெந்துபோனது. அதனால் அங்கிருந்து உடனே வெளியேற விரும்பினார்.

சுவாமிஜி வெளியேறப் போகிறார் என்பதை அறிந்து கொண்ட அந்த ஒழுக்கமற்ற துறவிகள் பயந்து போனார்கள்.

காரணம், அவர்களின் தீயச் செயல்கள் வெளியே உள்ளவர்களுக்குத் தெரிந்துவிடுமே!

அதனால், சுவாமிஜிக்கு மடத்திலேயே சிறை. இதற்கெல்லாம் அஞ்சுபவரா சுவாமிஜி?

அந்த மடச் சிறையிலிருந்து எப்படித் தப்புவது என்று சிந்திக்கத் தொடங்கினார்....

அவருக்கு உதவ ஒரு சிறுவன் முன் வந்தான்.

அச்சிறுவன் மூலம் அரசருக்கு கடிதம் அனுப்பினார்.

உடனே பலனும் கிடைத்தது. சிறையில் இருந்து வெளிப்பட்டார். ❑

## 28. காவியுடை ஏன்...?

ஒரு சமயம் அன்பர் ஒருவர் சுவாமிகள் போன்ற துறவிகள் காவியுடை அணிவதன் காரணத்தை அறிய விரும்பினார்.

அவர் கேட்ட கேள்விக்கு, சுவாமிஜி அளித்த பதில் இதுதான்...

"என்னைப்போன்ற துறவிகள், மற்றவர்கள் அவர்களிடம் வந்து யாரேனும் பிச்சை கேட்டால் இல்லை என்று சொல்ல வாய்ப்பாகி விடுமல்லவா...?

துறவிகளும் தம்மைப்போல் ஏதுமில்லாதவர். பிச்சையேற்று உண்பவர் என்பதை முன்னரே அறியும் பொருட்டுதான், அவர்கள் காவி ஆடை அணி கின்றனர்" என்றார்.

சுவாமிஜியின் ஆழ்ந்த சிந்தனையில் விளைந்த பதிலைக் கேட்ட அன்பர் வியந்து போனார். மகிழ்ந்து போனார்.

❑

## 29. வியத்தகு ஆற்றல்

விவேகானந்தர், மதப்பிரச்சாரம் தொடர்ந்தது. அவ்வேளையில் பிச்சையேற்றுதான் உண்டு வந்தார்.

வயிற்றுப்பசியை இப்படி ஆற்றிக் கொண்ட விவேகானந்தர் தம் அறிவுப் பசியை ஆங்காங் கேயுள்ள நூலகங்களுக்குச் சென்று பெற்றுக் கொள்வார்.

அவர் அறிவுப் பசியையும், அதை அவர் ஆற்றிக் கொண்ட நிலையும் ஒரு நூலகருக்கே வியப்பை அளித்தது.

சர்.ஜான்லபாக் என்ற அறிஞரின் நூல்களைச் சுவாமி புரட்டிப் பார்த்தாரா, படித்துப் பார்த்தாரா என்று ஐயம் தோன்றியது.

அவ்வளவு விரைவாக சுவாமிஜி அந்நூலைப் படித்திருந்தார்.

‘‘சுவாமி இந்த நூலை அதற்குள் படித்து முடித்துவிட்டீர்களா...?’’ கேட்டேவிட்டார்.

அவர் கேள்வி சுவாமிஜிக்கு நகைப்பை வரவழைத்தது....

‘‘நான் புத்தகத்தைப் புரட்டி இருக்கிறேனா, படித்திருக்கிறேனா என்பதை நீங்கள் அறிய

விரும்பினால், அந்நூலில் சில கேள்விகளைக் கேளுங்கள்'' என்றார்.

நூலகர் தயங்கினார். அவர் தயக்கத்தைப் போக்கினார். சுவாமிஜி நூலகர் கேள்விகளைக் கேட்கத் தொடங்கினார்.

சுவாமிஜியின் பதில்களைக் கேட்டு அதிர்ந்தே போனார், நூலகர்.

சுவாமிஜி, அந்த நூலை மனப்பாடமே செய்து இருந்தார் என்பதை உணர்ந்தார், நூலகர்.

❑



## 30. நானும் புகைக்கட்டுமா?

சமயப் பிரச்சாரத்தில் ஈடுபட்டு நகரங்கள் தோறும், கிராமங்கள் தோறும் பயணம் செய்து கொண்டிருந்தார், விவேகானந்தர்.

ஒரு நாள் ஒரு கிராமத்தின் வழியே நடந்து கொண்டிருந்தார். அப்போது சுவாமிஜி ஒரு விவசாயியைச் சந்தித்தார்.

அப்போது அந்த கிராமவாசி தன் குளிரைப் போக்கப் புகைபிடித்துக் கொண்டிருந்தார்.

சுவாமிகள் வேடிக்கையாக அந்த விவசாயியிடம், ‘‘நானும் கொஞ்சம் புகை இழுத்துக் கொள்ளட்டுமா?’’ என்று கேட்டார்.

கிராமவாசி அவர் சொன்னதைக் கேட்டு, நடுங்கிய படியே, ‘‘சுவாமிஜி, நீங்கள் பெரியவர், மகான்... நான் வீதியைப் பெருக்குபவன்... கீழ்ச்சாதிக்காரன்... நான் வாயில் வைத்துப் புகைத்ததை....’’ என்று சொல்லி அவர் காலில் விழுந்து வணங்க முற்பட்டதும்... விழகிக் கொண்டார், விவேகானந்தர்.

ஆனால், அவர் மனத்தில் குழப்பம், போராட்டம்.

அவர், அவன் பார்வையில் பெரியவர்... மகான் சந்நியாசி.

'அவன் தாழ்ந்தவன். அதற்காக அவன் பயன் படுத்திய புகையைப் பயன்படுத்தாமல் திரும்பி விட்டால்? அது அவருடைய தாழ்வு உணர்வை மேலும் உறுதி செய்யுமே!'

விவேகானந்தர், திரும்பி வந்தார். கிராமவாசியிடமே - அந்த விவசாயியிடமே பேசினார்.

விவசாயி நினைத்துக் கொண்டிருந்த உயர்வு தாழ்வு என்ற கற்பனையை நீக்கி வைத்தார்.

அவர் புகைத்த அதே புகை போக்கியில் விவேகானந்தர், ஓர் இழுப்பு இழுத்துவிட்டு, திருப்பி அவரிடமே கொடுத்து விட்டுத் தம் போக்கில் நடக்கத் தொடங்கினார்.

❑



## 31. எதிர்த்து நில்...

இந்து மதப் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வந்தார், விவேகானந்தர். அது சமயம் அவர் சில சீடர்களை உடன் அழைத்துச் செல்வார், சில வேளைகளில் தனியாகச் செல்வார்.

ஒருநாள் காசியில் தனியே நடந்து சென்று கொண்டு இருந்தார், விவேகானந்தர்.

அப்போது, அவரை குரங்குகள் துரத்தத் தொடங்கின. அவைகளிடம் இருந்து தப்பிக்க, ஓடத் தொடங்கினார், விவேகானந்தர்.

ஓடுபவர்களைக் கண்டால் துரத்துபவர்கட்குக் கொண்டாட்டம்தானே...! குரங்குகள் துரத்தின.

அவ்வேளையில் திடீரென ஒரு குரல் ''ஏன் ஓடுகிறாய்...?! எதிர்த்து நில்...'' என்று வந்தது.

விவேகானந்தர் திரும்பினார்....

தைரியமாக நின்றார்.... குரங்குகளும் நின்றன.

ஒரு கணம் நின்ற குரங்குகள் சுவாமிஜியின் ஒளி வீசும் முகத்தையும் வீரம் கொப்பளிக்கும் விழிகளையும் பார்த்தன...

அப்புறம் அவைகளுக்கு அங்கு என்ன வேலை? திரும்பிப் பார்க்காமல் ஓடின.

❑

## 32. மனிதப் புனிதர்...

"துறவிகள், தங்கள் ஆச்சாரங்களை விட்டு கீழ் நிலையில் பிறந்தவர்கள் வீட்டில் எல்லாம் பிச்சை எடுக்கலாமா? அவர்கள் வீட்டில் சாப்பிடலாமா...?" என்று அன்பர் ஒருவர் கேட்டார்.

அதைக் கேட்டு கண்கள் சிவந்து போனார், விவேகானந்தர்.

"நான் துறவி, இந்த உலகத்தில் எல்லாவற்றையும் துறந்த துறவி. நான் கழிவுகளை வீடுகளில் அள்ளி சுத்தப்படுத்தும் துப்புரவாளன் வீட்டிலும் சாப்பிடுவேன்.

இந்த என் செயலுக்காக நான் வருத்தப்பட்ட தில்லை; கடவுளிடம் பயந்ததும் இல்லை. அதற்குத் தேவையு மில்லை.

ஏனென்றால், கடவுளே அதை அனுமதிக்கிறார். நான் சாத்திர சம்பிரதாயங்களுக்கும், அதை சுமந்துள்ள புத்தகங்களுக்கும் நான் பயப்படத் தேவையில்லை.

அவைகள் என் இந்தக் கருத்தை ஏற்றுக் கொள்கின்றன.

நான் உங்களுக்கு... உங்களைப் போன்ற மக்களுக்குத்தான் பயப்படுகிறேன்.

ஏனென்றால், உங்களுக்குக் கடவுளும் தெரியாது; சாத்திரங்களும் புரியாது.

நான் இறைவனை எல்லா இடங்களிலும், மிகத் தாழ்ந்த உயிர்களிடத்திலும் இருப்பதைக் காண்கிறேன், என்னைப் பொறுத்தவரை எதுவும் உயர்ந்தது என்றோ, தாழ்ந்தது என்றோ கிடையவே கிடையாது.

சுவாமி சொல் வேறு, செயல் வேறுபட்டவர் அல்ல. சொன்னதை செய்தவர், செய்வதைச் சொன்னவர்.

ஒருநாள் சுவாமிஜிக்கு தாழ்ந்த சாதியில் பிறந்த ஒருவர் சமைத்துச் சாப்பிட ஏற்ற நல்ல பொருள்களைக் கொண்டு வந்து கொடுத்தார்.

அவருக்கு எண்ணம் என்னவென்றால் சுவாமிஜி மகான், ஆசாரமானவர் வெளியே யார் வீட்டிலும் உண்ணமாட்டார்... குறிப்பாக நம்மைப்போன்ற தாழ்ந்த குலத்தில் பிறந்தவர் வீட்டில் கண்டிப்பாக சாப்பிடவே மாட்டார் என்ற எண்ணத்தில்தான்...

அவர் கைப்படவே, அவர் இஷ்டம்போல் வேண்டியதை சமைத்துக் கொள்ளட்டும் என்ற நிலையில் சமையல் பொருள்களை எல்லாம் அவர் கண் முன்னே கொண்டு வந்து வைத்தார்.

சுவாமிஜி அந்த தாழ்ந்த குலத்தவரிடம் கேட்டார், "அன்பனே! நான் உன் வீட்டுக்கு வந்தால், நீ எனக்கு சமைத்து உணவு பரிமாற மாட்டாயா.... அல்லது சமைத்த உணவைக் கொண்டு வந்து தரமாட்டாயா?"

சுவாமிஜி சொன்னதைக் கேட்டு ஆடிப்போனார், அந்த தாழ்ந்த குலத்தில் பிறந்த மனிதர், ''சுவாமிஜி, நாங்கள் தாழ்ந்த குலத்தல் பிறந்தவர்கள்... நீங்கள் மகான்... சாமியார்....''

''சாமியாருக்கு உயர்வு தாழ்வு, வேறுபாடு கிடையாது. உன் வீட்டிலிருந்து சமைத்த உணவையே கொண்டு வரலாம். நான் சாப்பிடுகிறேன்.''

அதைக் கேட்ட தாழ்ந்த குலத்தவர் திகைத்தார். தயங்கினார்.

சுவாமிகள் வற்புறுத்தினார்.

அந்த தாழ்ந்த குலத்தில் பிறந்தவர், சுவாமிஜிக்கு உணவு செய்து கொண்டு வந்து கொடுத்தார்.

சுவாமிஜி அதை அன்புடன் ஏற்று உண்டு மகிழ்ந்தார். அதை அந்த ஏழை கண்டு மகிழ்ந்தார்.

❑



○ விவேகானந்தரின் வீரிய வித்துக்கள்! ○

எனது இளம் நண்பர்களே! வலிமை உடையவர்களாக இருங்கள். இதுவே நான் உங்களுக்கு வழங்கும் அறிவுரை. கீதை படிப்பதைவிடக் கால் பந்தின் மூலம் நீங்கள் சொர்க்கத்திற்கு அருகில் இருப்பீர்கள். இவை தைரியமான வார்த்தைகள். ஆனால், உங்களை நேசிக்கின்ற காரணத்தால், இவற்றை நான் சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன். செருப்பு எங்கே கடிக்கிறது என்பதை நான் அறிவேன். ஒரு சிறிது அனுபவமும் பெற்றிருக்கிறேன். உங்கள் தோள்கள், தசைகளின் சற்றுக் கூடுதலான வலியால், கீதையை இன்னமும் சற்றுத் தெளிவாகப் புரிந்து கொள்வீர்கள்.

❑

வெற்றி பெறுவதற்கு நிறைந்த விடா முயற்சியையும், பெரும் மன உறுதியையும் நீங்கள் பெற்றிருக்க வேண்டும். விடா முயற்சி பெற்றவன், 'சமுத்திரத்தையே குடித்து விடுவேன்; எனது சங்கல்பத்தால் மலைகள் நொறுங்கி விழுந்தாக வேண்டும்' என்று சொல்கிறேன். அத்தகைய ஆற்றலை, அத்தகைய மன உறுதியை நீ பெற்றிடு. கடுமையாக உழை. உனது குறிக்கோளை அடைவாய்.

❑

நீ எதை நினைக்கிறாயோ, அதுவாகவே ஆகிறாய். நீ உன்னைப் பலவீனன் என்று நினைத்தால் பலவீனனாகவே நீ ஆகி விடுவாய். நீ உன்னை

வலிமையுடையவன் என்று நினைத்தால், வலிமை படைத்தவனாகவே ஆகிவிடுவாய்.

❑

சுதந்திரமானவனாக இரு. எவரிடமிருந்தும் எதையும் எதிர்பார்க்காதே. நான் உறுதியாகச் சொல்வேன். உனது கடந்த கால வாழ்க்கையை நீ பின்னோக்கித் திரும்பிப் பார்ப்பாயானால், நீ வீணாக எப்போதும் மற்றவர்களிடமிருந்து உதவியைப் பெற முயற்சி செய்ததையும், அப்படி எதுவும் வராமற் போவதையும்தான் காண்பாய். வந்த உதவிகள் எல்லாம் உனக்குள்ளிருந்து வந்தவையாகத்தான் இருக்கும்.

❑

'இல்லை' என்று ஒருபோதும் சொல்லாதே! 'என்னால் இயலாது' என்று ஒருநாளும் சொல்லாதே! ஏனெனில் நீ வரம்பில்லா வலிமை பெற்றவன். உன்னுடைய உண்மை இயல்போடு ஒப்பிடும்போது, காலமும் இடமும்கூட உனக்கு ஒரு பொருட்டல்ல. நீ எதையும், எல்லாவற்றையும் சாதிக்கக்கூடியவன். சர்வ வல்லமை படைத்தவன் நீ.

❑

மக்கள் என்ன வேண்டுமானாலும் சொல்லட்டுமே. நீ உனது சொந்த, உறுதியான முடிவில் பிடிப்புடன் இரு. பிறகு நிச்சயமாக மற்றவை நடந்தேறி, உலகம் உனது காலடியில் பணிந்து கிடக்கும்.

❑

எழுந்து நின்று போராடு. ஓர் அடியும் பின்வாங்கக் கூடாது. கருத்து இதுதான். எது வந்தாலும் போராடி முடி. தங்கள் நிலையிலிருந்து நட்சத்திரங்கள் பிறழட்டும். முழு உலகம் நமக்கு எதிராக எழுந்து எதிர்த்து நிற்கட்டும். மரணம் என்றால், வேறு உடை மாற்றுவதுதான். அதனால் என்ன போயிற்று? இப்படிப் போராடு. கோழையாவதனால், நீ எந்த ஒரு பயனையும் பெற மாட்டாய். ஓர் அடி நீ பின்வாங்குவதனால், எந்தவொரு துரதிர்ஷ்டத்தையும் தவிர்த்துவிட முடியாது. உலகிலுள்ள அத்தனை கடவுள்களையும் நீ கூவியழைத்துப் பார்த்தாகி விட்டது. அதனால் துன்பம் ஓய்ந்துவிட்டதா? நீ வெற்றி பெற்றபோது கடவுளர் உனக்கு உதவ முன்வந்தார்கள். அதனால் என்ன பயன்? போராடி முடி. நீ எல்லையற்றவன்; மரணமற்றவன்; பிறப்பற்றவன். எல்லையற்ற ஆத்மா ஆதலால், நீ அடிமையாக இருப்பது உனக்குப் பொருந்தாது. எழுந்திரு; விழித்துக்கொள். எழுந்து நின்று போராடு.

❑

நமது வாழ்க்கை சிறந்ததாகவும், தூய்மையுடையதாகவும் இருந்தால் மட்டும்தான், உலகமும் சிறப்பும் தூய்மையும் பெற்றதாக இருக்க முடியும். அது காரியம். நாம் அதை விளைவிக்கும் காரணம். எனவே நம்மை நாம் தூய்மைப்படுத்திக் கொள்வோமாக. நம்மை நாம் பரிபூரணர்களாக்கிக் கொள்வோமாக.

❑

தூய்மை, பொறுமை, விடா முயற்சி ஆகிய மூன்றும் வெற்றிக்கு இன்றியமையாதவையாகும்.

அத்துடன் இவை அனைத்திற்கும் மேலாக அன்பு இருந்தாக வேண்டும்.

❑

எப்போதும் விரிந்து மலர்ந்துகொண்டே இருப்பதுதான் வாழ்க்கையாகும். சுருங்கி விடுவது மரணம்தான். தன்னுடைய சொந்த சுக வசதிகளை மட்டும் கவனித்துக்கொண்டு, சோம்பல் வாழ்க்கை வாழும் சுயநலக்காரனுக்கு நரகத்திலும்கூட இடம் கிடைக்காது.

❑

தாழ்ந்த நிலையிலுள்ள நம்முடைய மக்களுக்குக் கல்வியைத் தந்து, இழந்துவிட்ட தங்களின் உயர்ந்த நிலையை அவர்கள் வளர்த்துக்கொள்ளும்படி செய்ய வேண்டும். இதுதான் நாம் இப்போது செய்ய வேண்டிய ஒரே சேவையாகும். உயர்ந்த கருத்துக் களை அவர்களுக்குக் கொடுங்கள். அந்த ஒரே ஒரு உதவிதான் அவர்களுக்குத் தேவைப்படுகிறது. பிறகு அதன் விளைவாக மற்ற நன்மைகள் எல்லாம் வந்து சேரும். இரசாயனப் பொருள்களை ஒன்று சேர்த்து வைப்பதுதான் நமது கடமை. பின்பு அவை இயற்கையின் விதியையொட்டித் தாமாகவே படிகங்களாக மாறிவிடும். இப்போது மலை முகமதுவிடம் செல்லாவிட்டால், முகமதுதான் மலையிடம் செல்ல வேண்டும். ஏழைப் பையன் கல்வியை நாடி வர முடியாவிட்டால், கல்விதான் அவனை நாடிப் போக வேண்டும்.

❑ ❑ ❑



நூலாசிரியர் பாபநாசம் குறள்பித்தன் 19.07.1946–ஆம் ஆண்டு தஞ்சை மாவட்டத்தில் பிறந்தவர்.
இவரது பெற்றோர் தனம்–வெங்கடாசலம்.
தஞ்சை கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் புலவர் பட்டம் பெற்றவர்.
1965 முதல் சுதேசமித்திரனில் எழுதத் தொடங்கி இன்று வரை எழுதி வருகிறார்.

புரட்சித் தலைவர் எம். ஜி.ஆர். அவர்கள் நடத்தி வந்த 'தாய்' வார இதழில் துணையாசிரியராக பத்து ஆண்டுகள் பணியாற்றியுள்ளார். சிறுவர், ஆன்மிகம், நாடகம், கவிதை, பல்துறை என்று இதுவரை எழுபத்தைந்து நூல்களுக்கு மேல் எழுதியுள்ளார்.

வி.ஜி.பி. விருது [1984], மனித நேய அறக்கட்டளை விருது [2001], திருப்பூர் தமிழ்ச்சங்க விருது [2002], தமிழக அரசு விருது [2002], காஞ்சி தமிழ்வளர்ச்சி சங்க விருது [2008], மதுராந்தகம் மகாகவி பாரதி நற்பணி மன்றவிருது [2008], ஸ்ரீ வைணவ மகாசங்க விருது [2008] என பல்வேறு அமைப்புகளின் விருதுகளையும் தன் எழுத்துப் பணிக்காக வென்று குவித்தவர்.

'இரவும் பகலும் தாய்த் தமிழுக்குப் பணியாற்றுவதே என் பிறவிப் பெரும் பயன்' என்ற நோக்கில் எழுதிக் கொண்டே இருக்கும் இவருடைய நூல்களின் எண்ணிக்கை எழுபத்தைந்தைத் தாண்டி நடைபோடுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.